[illegible]

V 4 No 4 Nov 1929

JL
[illegible]21LM193A
M 29.11.11.
210780.

REGD NO: M 1520.

"BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:

வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XI} NOV. 1929 {No 11

PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

17 JUN 19

N. B:—The Subscribers are requested to pay subscription[illegible] our agents only on obtaining our Bonafide receipts.

All Rights Reserved by the Publishers.

பாலவிநோதினி

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
தெய்வ வணக்கம்	503
ஹிதோபதேசம்	504—506
பிள்ளை வரம் பெற்ற பிரபு	507—512
ஆபத்திலும் பொறுமை வகித்த அறிஞன்	513—515
பெரியவருடைய சாபம் கொடிது ...	516—522
தெய்வகுஞ்சரியம்மை திருமணக் கும்மி	523—524
ஸ்ரீ அருணசலேசர் நவகாரிகை மாலை....	525—526
பெரியவரின் அரிய உபதேசம்	527—528
அரிய பழமொழிகள்	529—530
மஹாபலிபுரம்	531—535
சிவபக்த சிரோமணி	536—539
மனிதனும், மிருகமும்	540
ஆடம்பரம் பயன் தராது	541—542
சோம்பரென்பவர் தேம்பித் திரிவர் ...	543—544
கூச்சல்கள்	545—546
நான் கண்ட புதுமை	547—550

குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது [illegible] ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் [illegible] ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

BEAUTY AND UTILITY

Making beauty useful by making utility beautiiul is one of the true offices for craftsmanship, Here, useful things, necessities of every day, gold and silverware, jewellery, are wrought in form and fashion and detail of charm and beauty which interest them with their double value.

From these, thoughtful friends, may in making their wedding Gifts, surround the bride with a beauty that is useful and a utility that is beautiful.

SURAJMAL LALLUBHAI & Co.,

Diamond Merchants, Jewellers, Gold and Silversmiths,

313 Esplanade, Madras.	135, Big Bazaar, Trichinopoly.	12, Lal Bazaar St., Calcutta.	134, Mogul St., Rangoon.

வாசிப்பதற்கு இனிமையானதும் நற்புத்தி புகட்டக்கூடியதுமான இப்புத்தகம், தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய

நாராயணஜீ கேசவஜீ,

நெ. 1/94, சைனா பஜார் ரோட், சௌகார்பேட், மதராஸ்.

Moral class reading books for the young

BY

Varakavi Tiru: A SUBRAMANYA BHARATI

	ரூ.	அ.	ப.
இராமாயண இரகசியம்	0	12	0
ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை	0	2	6
பரதன் — நல்ல தம்பி	0	3	0
ஸீதாதேவி — நல்ல மனைவி	0	4	0
குகன் — சிறந்த நண்பன்	0	2	6
மாருதி — நல்ல அடிமை	0	2	6
விபீஷணன் — சிறந்த பக்தன்	0	1	6

For Copies, please apply to :—

BALAVINODINI OFFICE,

323, Tiruvottiyur High Road, MADRAS.

MADAN MANJARI PILLS

பூலோக அமிர்த மென்று புகழப்படுகின்ற இம்மாத்திரை அஜீரணம், மலச்சிக்கல், ரத்தக் குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளையும், நரம்புத் தளர்ச்சி, நபும்சகத்துவம், இவைபோன்ற விசேஷ வியாதிகளையும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் நிகரற்றது.

40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1 0 0

மதன மஞ்சரி ஆபீஸ், 1/94, சைனா பஜார் ரோட், மதராஸ்.

எங்கும் புகழ்பெற்ற

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம, குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 4. ஷை சாதா ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 3½.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

R. S. சுகந்த மூக்குத்தூள்

விலை பாடல் 1-க்கு அணா 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 ஷை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா. 1 12 0

விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ் வகையறா பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ. 44. கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம "நஸ்யம்"

மதனகாமேஸ்வர லேகியம்

இது மிக்க பலமும், வீரியவிருத்தியு முண்டாக்குவதில் மிக்க சிரேஷ்டமானது. மேகம், வெட்டை, பலயீனம், சுக்கிலநஷ்டம், நீர் வியாதி முதலான நோய்களை நீக்கி பலமும், காந்தியும், சம்போகசத்தியும், சந்தானபிராப்தியு முண்டாக்குவதில் நிகரற்றது.

இரண்டு டப்பிகள் போதுமானது.

20 தோலா டப்பி 1-க்கு ரூபா	1	4	0
வி.பி. சார்ஜு	0	6	0

பி. சி. ஏ. அண்ட் கம்பெனி,

ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.

யூகலிப்டஸ் ஆயில்

ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டிய

சுத்தமான நீலகிரித் தைலம்

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷஜந்துக்களின்கடி, கத்தி வகையறா, வெட்டுக்காயங்கள், நரம்புச்சுளுக்குகள், தீப்புண்கள், வெந்நீர்பட்டு வெந்தபுண்கள், பிளவைகள். புரைபோன ரணங்கள். இன்புளூவென்ஸா, மலேரியா முதலிய சகலவித சுரங்கள், இருமல், வாய்வுபிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கோரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல், கண்கட்டி முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

	ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப.
1 அவுன்ஸ் புட்டி 1-க்கு	0	4	0	வி.பி. சார்ஜ்	0	4	0
1 ,, 1 டஜன் (12)	2	8	0	வி.பி. சார்ஜ்	0	12	0
1 அவுன்ஸ் புட்டி குரோஸ் 1-க்கு	28	0	0	பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு.			
½ ,, டஜன் 1-க்கு	1	8	0	வி.பி. சார்ஜ்	0	10	0
½ ,, குரோஸ் ,,	17	0	0	பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு.			
24 அவுன்ஸ் புட்டி 1-க்கு	2	8	0	வி.பி. சார்ஜ்	1	1	0
ஷை புட்டி டஜன் 1-க்கு	28	0	0	பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு.			

T. C. நாகலிங்கப்பா & கம்பெனி,
நெ. 280, வால்டாக்ஸ் ரோட்டு, பார்க்டவன் போஸ்டு, சென்னை.

FEDERATED INDIA

(An all India English Weekly)

PUBLISHED EVERY WEEK

Annual Subscription Rs. 5.

PLEASE APPLY TO:—

THE MANAGER,
'FEDERATED INDIA,'
TONDIARPET, MADRAS.

தயாராய்விட்டது! *தயாராய்விட்டது!!*

திருப்புகழ் விருத்தியுரை

552-பக்கங்கள் **11**-படங்கள்

கிளேஸ் பதிப்பு ரூ **6**. பெதர்வெயிட் பதிப்பு ரூ. **8**.

இச்சிறந்த நூலில் சுவாமிமலை, பழநி, திருச்செந்தூர் ஆகிய திவ்ய ஸ்தலங்களில் எழுந்தருளியுள்ள முருகக்கடவுள்மீது, ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய திருப்புகழப் பாடல்களும், அவற்றிற்கு பதவுரை, விருத்தியுரைகளும் கொண்டது.

விலாசம் :—

அல்லயன்ஸ் கம்பெனி,
ஷண்முக விலாசம், மயிலாப்பூர்,
சென்னை.

பாலர் கதாமஞ்சரி

22 இனிய கதைகள் எளியநடையில் எழுதியது.

விலை ரூபா 2.

கீழ்நாட்டுக் கதைகள் 15 புஸ்தகங்கள்.

விலை ரூ. 3-9-0.

பால ராமாயண வசனம், விலை அணா 12.

(மாதவையர் பதிப்பு.)

N. VENKATARAYALU & SON,
Books and Stationery Suppliers,
87, Ramaswamy Street, G.T., Madras.

எப்பொழுதும்

பா ர தீ பா ம்

என்னும் மருந்தையே உபயோகியுங்கள். இது எல்லா நோய்களுக்கும் கைகண்ட மருந்து. திமிர்வாத நோய்களிதைக் கண்ட மாத்திரத்தில் பரந்தோடும்.

புட்டி 1-க்கு விலை ரூபா	...	0 6 0
,, 12-க்கு ,, ,,	...	3 12 0

ஏஜெண்டுகள் தேவை. ஏஜென்டுகளாக விரும்புவோர்கள் 1 அணா தபால் பில்லை அனுப்பவேண்டும்.

பாரதி வைத்தியசாலை,
123, ஆதம் சாயபு தெரு,
ராயபுரம், சென்னை.

பிராஞ்சுகள் :—கரூர், திரிச்சினாப்பள்ளி.

சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்

இதன் கிரயம்.

96 வேளை 48 நாள் லேகிய டப்பி விலை	ரூ.	15	0	0
48 ,, 24 ,, மருந்து டப்பி 1-க்கு	,,	8	0	0
24 ,, 12 ,, ஷை	,,	4	4	0

எவ்விதமான பத்தியமில்லை. சிங்கை, பினாங், கொச்சின், சீனா, ஜாவா, சுமாத்ரா முதலிய ஊராரும் மருந்து கிரயமும் போஸ்ட் சார்சு ரூபா 2 சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும்.

தாமரை லிங்கத்தைலம்.

கனவான்களே! இந்த அருமையான தைலத்தை மூன்ற தடவை போதுமான அளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த கருவிகளின்மீது தேய்த்துவிடுவீர்களானால் தாங்கள் இதுவரையில் பார்த்திராத ஆச்சரியத்தைத் தரும்படியான கருவிகளைப் பெருக்கச்செய்து நரம்புகளுக்கு பலமும் திமிரும் உண்டாக்குமென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகரபாட்டில் விலை 1—0—0 வி. பி. பாக்கிங் சிலவு பிரத்தியேகம்.

ஸாஹேபியா மருந்துசாலை,
நெ. 146, பிராட்வே, சென்னை.

ஆர்டர் செய்யும்போது தயவுசெய்து பத்திரிகை பேரைக் குறி

போலி மேகரை வாங்கி மோசம் போகாதீர்கள்

இனும் ஆபீஸ் டேபில்-கிளாக்—(இம்மாதம்வரை தான்)

18 Kt. ரோல்கோல்டு-லிவர் FIDO-LEVER

(கை கெடியாரம்)

லிவர்

6-15-

அநேகர் வேண்டுகோளின் பேரில் பாக்டரிக்கு ஆடர் கொடுத்து இந்த மேகரை தருவித்திருப்பதால், கவனித்து வாங்கவும். இதை பிரபல்யம் செய்வதற்காகவே டேபில் கிளாக் இனும். இதுவரை 2000 செலவாகி சர்டடிபிகேட் பெற்றிருக்கிறோம். லிவர் மூமண்டு. சிறிய சைஸ் ஒரு முறை தருவித்தவர்கள் வேறு மேகரை ச்சிக்கார். 5 வருஷம் காரண்டி. லிவர் இல்லை என்றால், 3 தினத்தில் பணம் வாபீஸ். முந்துங்கள்.

இனும்
டேபில் கிளாக்.
R. ஷேப்



தபால் சிலவு தனி.

முன் விலை
ரூ. 15—0—0.

குறைந்த விலை
ரூ. **6-15 -0-**

NOBLE WATCH CO., SALES DEPT. (V)
(697-பி) PAREL BOMBAY (12)

Dr. Matameswara Row,

Physician and Surgeon,
ASTHMA SPECIALIST.

பெஜவாடா சிவாலயத் தெருவில் கனம் சேகுவார் மெத்தையில் பழைய போலீஸ் ஸ்டேஷனருகில் டாக்டர் மடமேஸ்வர ராவ் என்னும் பம்மாய் வைத்தியர் ஔஷத ஆலயம் திரந்திருக்கிறார். இவர் நீர்கடுப்பு, (Asthma) இருமல் இந்த நோய்களை நீக்குவதில் வெகுநிபுணர். இயாரண்டியுடன் வைத்தியம் செய்யப்படும். கண்வைத்தியமும் செய்வார். மேகவியாதிகளுக்கும், சுகசம்பந்தமான நோய்களுக்கும் நல்ல சிகிச்சை செய்யப்படும். இந்த வியாதிகள் இரகசியமாய் பார்த்து வைத்தியம் செய்யப்படும். இவர் ரணவைத்தியமும் செய்வார். ஸ்திரீகளுக்கு மருத்துவமும் செய்யப்படும். கல்விச்சாலை மாணுக்கர்களுக்கு மலிவாய் வைத்தியம் செய்யப்படும்.

ஷரா:—ஏழைகளுக்கு தருமமாய் வைத்தியம் செய்யப்படும்.

படியுங்கள் ! ஆனந்தப்படுங்கள் !!

ஆரியமத தத்துவபோதினி

இதில் மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும் சுலபமாக அறிந்துகொள்ளும்படி ஸனாதனங்களாகிய ஆரியமத தத்துவங்களெல்லாம் வினா, விடை ரூபமாக உரைக்கப்பட்டிருக்கின்றன. இதைப்படித்தால் மனிதர்கள் இந்துமத தத்துவங்களையும் தர்மங்களையும் நீதிகளையும் தெரிந்துகொண்டு, ஞானத்தை யடையலாம். **விலை அணா 4.**

வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்,
எஸ்பிளனேட், மதராஸ்.

பதினோராவது ஆண்டு

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 1 8 0
வெளிநாட்டிற்கு ரூ. 2 0 0

எங்கும் புகழ்பெற்ற

A. S.

சுகந்த மூக்குத்தூள்

இதில் ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்து உபயோகித்தால் இன்பமான சுகந்த வாசனையைத் தருவதோடு கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் கண்டிக்கும் வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

A. S. சுகந்த மூக்குத்தூள்.
புட்டி 1-க்கு 0—4—0
டஜன் 1-க்கு 2—4—0
சேர் 1-க்கு 3—0—0

M. J. பரிமள மூக்குத்தூள்.
சேர் 1-க்கு 1—8—0
டஜன் 1-க்கு 2—0—0

குணம்மணம்காரம்.வாடை முதலியவை.ஒருங்கே அமையப்பெற்றது

A. S. பட்டணம் பொடி

சேர் 1-க்கு ரூ. 0—12—0 வீசை 1-க்கு 3—4—0
தபால் சார்ஜ் பிரத்யேகம். பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். மகம்மது ஷம்சுத்தீன் சாயபு,
106, தங்கசாலை வீதி, சௌகார்பேட்டை,
P. B. No. 1201, MADRAS. (B)

குழந்தைகள்

ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும், வளரவேண்டுமானால் உலகப்பிரசித்திபெற்ற,

“ பாலமித்திரா மாத்திரைகளை ”

உபயோகியுங்கள். 300 மாத்திரைகள் விலை ரூ. 1—0—0 முழுவிபரங்களுக்கு எங்கள் இலவச புத்தகத்தைப் படியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ பார்மஸி,
26, பிராட்வே, மதராஸ்.

பாரதம்—ஆதிபர்வம்
தமிழ் வசனம்

நல்ல உயர்ந்த கிளேஸ் பேப்பரில் ஆப்டோன் படங்களுடன் 600 பக்கங்களுக்குமேல் அச்சிடப்பட்டுள்ளது. பாரதம் படிப்பவர்களுடைய பாபத்தைப் போக்கவல்லது; காரியசித்தியை அளிக்கத் தக்க மகிமையை உடையது. சகல ஞானத்தையும் போதிக்கத் தக்கது. ஆதலால் பெரியோர் இதனை ஐந்தாம் வேதமென்றும் கூறுகின்றனர். இந்த வசனம் பிரசங்க ரத்னாகரம் வித்வான் த. சண்முகக் கவிராயர் என்பவர் எழுதியது, இந்நூலை வாசிப்பவர் பிரசங்கவன்மையை அடைவதுடன் இனிய வசனம் எழுதும் பாஷாஞானத்தையும் பெறுவார். ஆதலால் இந்த நூலை வாங்கிப் படிக்க வேண்டியது நம் தமிழ் நாட்டு ஸ்திரீ புருஷர்களுடைய கடமைகளிலொன்றாகும். மற்றைய பருவங்களும் விரைவில் அச்சாகிவருகிறது.

ஆதிபர்வம் காலிகோ பயிண்டு விலை ரூபா **3-8-0.**

V. RAMASWAMY SASTRULU & SONS,
292, Esplanade, Madras.

தமிழ் நூல்கள்.

எமது காரியாலயத்தில் தமிழ் நூல்கள் உயர்ந்த காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப் பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.	பை
சதகங்கள் (குறிப்புரையுடன்).			
குமரேசசதகம்	0	5	0
கோவிந்தசதகம்	0	2	0
அறப்பளீசுர சதகம்	0	5	0
திருவேங்கட சதகம்	0	5	0
தண்டலையார் சதகம்	0	3	6
பாராயண நூல்கள் (குறிப்புரையுடன்).			
கந்தர் கலிவெண்பா	0	1	6
சரஸ்வதி அந்தாதி	0	1	6
அபிராமி அந்தாதி	0	1	6
கந்தரனுபூதி	0	1	6
திருமுருகாற்றுப்படை	0	2	0
நால்வர் நான்மணிமாலை	0	1	6
விநாயகர் அகவல்	0	1	0
இலக்குமி தோத்திரம்	0	1	0
ஆனந்தலகரி	0	1	6
சௌந்தரியலகரி ,, ...	0	1	6
நீதிநூல்கள் (குறிப்புரையுடன்).			
திருக்குறள்	0	8	0
நாலடியார்	0	6	0
நீதிநெறி விளக்கம்	0	1	6
ஆசாரக்கோவை	0	2	0
(பதவுரையுடன்).			
வாக்குண்டாம்	0	1	6
கொன்றைவேந்தன்	0	1	6
வெற்றிவேற்கை	0	1	6
நல்வழி	0	1	6
நன்னெறி	0	1	6
திருக்குறள் (பரிமேலழகர் உரை)	2	0	0

திருக்குறள் விளக்கும் நூல்கள் (குறிப்புரையுடன்).	ரூ.	அ.	பை.
சிவசிவ வெண்பா	0	2	0
சோமேசர் முதுமொழி வெண்பா	0	2	0
இரங்கேசவெண்பா	0	2	6
ஆத்திசூடி வெண்பா	0	1	6
திருத்தொண்டர் வெண்பா	0	1	6
திரட்டு நூல்கள்.			
திருவருட்பா	0	6	0
திருப்புகழ்	0	2	6
பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு ...	0	3	0
தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ...	0	4	0
தேவாரத் திருமுறைத்திரட்டு	0	10	0
இலக்கணமும், நிகண்டும்.			
நன்னூல்	0	3	0
நேமிநாதம்	0	2	0
புறப்பொருள் வெண்பா மாலை	0	7	0
பதினோராவது நிகண்டு	0	6	0
சேந்தன் திவாகரம்	0	2	0
பாலபோத இலக்கணம்	1	0	0
வசன நூல்கள்.			
கதாமஞ்சரி	0	4	0
ஜீவகாருண்ய ஒழுக்கம்	0	4	0
மனுமுறைகண்ட வாசகம்	0	5	0
விநோதரசமஞ்சரி	0	8	0
பரமார்த்த குரு கதை	0	4	0
*சாவித்திரி சரித்திரம்	0	6	0
பஞ்சதந்திரம்	0	8	0
இராஜரிஷி (தமிழ் மொழிபெயர்ப்பு நூல்) ...	1	4	0
ரூவெங்கார்	1	8	0
மகாதேவன் ஒரு இனிய தமிழ் நாவல் ...	0	12	(
பாரதவசனம் ஆதிபர்வம்	3	8	(

V. Ramaswamy Sastrulu & Sons,
Book Sellers & Publishers, 292, Esplanade, Madra

	रू.	आ.
संस्कृतबालशिक्षा आन्ध्रलिप्या समलंकृता श्रीरामायण-संग्रहसहिता च संस्कृतान्ध्राक्षरजिज्ञासूनामत्युपयोगिनी	०	३
हिन्दी तेलुगु बालशिक्षा	०	३
,, प्रथमवाचकम्	०	८
संस्कृतान्ध्रवर्णबोधिनी पत्रफलका	०	२
सरस्वतीप्रार्थना, श्यामलादण्डकम्, नवरत्नमाला च	०	२
शब्दमञ्जरी, (दृढपत्रात्मिका)	०	६
अमरकोशः	०	८
हितोपदेशः	०	१२
रघुवंशमहाकाव्यम् सव्याख्यानम्	१	४
मेघसन्देशः ,,	०	८
भोजचरित्रम्	०	८
विक्रमार्कचरित्रम्	०	१०
व्रतरत्नाकरः	१	८
महाकविबोधायनकृत भगवदज्जुकनाटकम्	०	६
अभिज्ञानशाकुन्तलनाटकम्	....	
भर्तृहरिशतकत्रयम्, मूलम्	०	८
बालरामायणम्	०	२
विवेकचूडामणिः	०	८
रामकर्णामृतम्	०	८
श्रीकृष्णकर्णामृतम्	०	६
,, आंग्लानुवादसहितम्	१	८

210780

शिवकवचम्	०	२
शिवानन्दलहरी	०	२
आदित्यहृदयम्	०	१
श्रीगोविन्दद्वादश (चतुर्दश) मञ्जरिकास्तोत्रम्	०	१
श्रीलक्ष्मीनारायणहृदयम्	०	३
पञ्चसूक्तानि	०	२
रुद्रनमकचमकम्	०	२
यजुर्वेदसन्ध्यावन्दनम्	०	२
यजुर्वेदाह्निकम्	०	२
श्रीवैष्णवाह्निकम्	०	६
सूर्यनमस्कारमन्त्राः त्र्युचब्रह्मयज्ञसहितास्सस्वराश्च	०	१
श्रीदक्षिणामूर्तिस्तोत्रम्	०	१
आळवन्दारस्तोत्रम्	०	१
सौन्दर्यलहरीस्तोत्रम्	०	२
लक्ष्मीनृसिंहस्तोत्रम्	०	१
देवीस्तोत्रकदम्बः	०	६
मुकुन्दमाला	०	१
बृहत्स्तोत्ररत्नाकरे प्रथमभागः	२	०
बृहत्स्तोत्ररत्नाकरः (द्वितीयभागः)	२	०
श्रीमद्रामायणे बालकाण्डः	१	०
,, अयोध्याकाण्डः	१	१२
,, आरण्यकाण्डः	१	०
,, किष्किन्धाकाण्डः	१	०
,, सुन्दरकाण्डः	१	०
,, युद्धकाण्डः	२	०

ध्वत्रयम्	०	३
ह्मसूत्राणि, मूलमात्रम्	०	२
गवद्गीता मूलमात्रम्	०	४
ाष्णुसहस्रनामस्तोत्रम् (नामावळीसहितम्)	०	४
लितासहस्रनामस्तोत्रम् ,,	०	६
क्ष्मीसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ब्रह्मण्यसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ाघसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ङ्कटेशसहस्रनामस्तोत्रम् ,,	०	४
न्नपूर्णासहस्रनामस्तोत्रम् ,,	०	४
ांजनेयसहस्रनामस्तोत्रम् ,,	०	४
णपतिसहस्रनामस्तोत्रम् ,,	०	४
रिामसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ीकृष्णसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ीगोपालसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ीलक्ष्मीनृसिंहसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ीवटुकभैरवसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ीभवानीसहस्रनामस्तोत्रम् ,,	०	४
ीकालिकासहस्रनामस्तोत्रम् ,,	०	४

वाविळ्ळ रामस्वामिशास्त्रुलु अण्ड् सन्स्,

२९२, एस्प्लनेड्, मद्रास्.

மகத்தான

லாபகரமான விற்பனை.

வாசித்து, யோசித்து, ஆர்டர் செய்யுங்கள்.

ஆச்சரியமான போட்டோ பிடிக்கும் காமிரா.

அதிகப் பணங்கள் செலவிட்டு, பெரிய கனதனவான்களின் உபயோகத்திற்காகவென்றே தயார் செய்யப்பட்டது. இந்தக் காமிராவினால், நீங்கள் பறவைகள், ஆகாயக்கப்பல்கள், மரங்கள், வீடுகள், மற்றும் ஆண்பெண் பாலர் உட்கார்ந்து போட்டோ பிடிக்கவும் கூடும். ஒவ்வொரு காமிராவினோடும், நாங்கள் அதற்கான சாமான்களையும், உபயோகிக்கும் விதத்தையும் அனுப்புகிறோம். இத்தகைய கிடைப்பதற்கரிதான கிராக்கியை வரங்காமல் விடாதீர்கள். விலை ரூ. 5-0-0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஆச்சரியமான விளையாடும் காகிதங்கள்.

நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. பணக்காரர்கள் சந்தோஷமாய்ப் பொழுதைப் போக்கக்கூடியது.

கையிருப்பு குறைந்து வருவதால் இன்றே ஆர்டர் செய்யுங்கள். விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் தனி.

கைத் தையல் மிஷின்.

இதனால் பெண்கள் அழகான புஷ்பங்கள், படங்கள், பட்டு, கம்பளி அல்லது நூலால், தலைகாணி, தலையணை உறை, பட்டு மேலாக்கு, நிஜார் இவைகளில் சுலபமாய் போடக் கூடும். போடும் விதம் மிகசுலபம். சுலபமாய் பணம் சம்பாதிக்கலாம். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பெண்பாடசாலைகளிலும் இம்மிஷின் இருப்ப தவசியம். மிஷின் ஒன்று விலை ரூ. 4-0-0.

தபால் சார்ஜ் தனி.

ஜோதிஷம்.

நூதனமாக ஜர்மன் தேசத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அரை நிமிஷத்தில் கீழ்ச் சொல்லிய முதலான அரிய சமாசாரங்களை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

1. ஒருவளுக்குப் பிறக்கப் போகும் குழந்தை பெண்ணா பிள்ளையா?

2. ஒருகேஸில் நீ அடைவது ஜயமா அல்லது தோல்வியா?

3. பரீக்ஷை முதயவிதுகளில் நீ தேருவாயா மாட்டாயா?

இதன் விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

K. L. காபூர் அண்டு கோ.,

லோஹரி மண்டி, லாகூர்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி II	1929ளு நவம்பர் மாதம்	பகுதி II

தெய்வ வணக்கம்

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழிற் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலாயி ரங்கண் படைத்தில னே அந்த நான்முகனே

வேலாயு தன்சங்கு சக்ராயு தன்விரிஞ் சன்னறியாச்
சூலாயு தந்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலாயு தக்கொடி யோனரு ளாய கவசமுண்டென்
பாலாயு தம்வரு மோஎம னோடு பகைக்கினுமே

(கந்தரலங்காரம்)

ஹிதோபதேசம்

திருடினவனுடைய புத்தி தடுமாறும். நியாய வழியில் நடப்பவனுடைய புத்தி சஞ்சலமடையாது. வண்ணான் அழுக்குத் துணியைக் கல்லின் பேரில் அடிப்பதுபோல் நாமும் நம்முடைய மனதைச் சுத்தப்படுத்தி வைத்துக்கொண்டால் நமக்கு ஒரு பயமும் கிடையாது.

நீ நல்ல நிலைமையிலிருக்கும்போது உன்னோடு சிநேகமாயிருந்து நீ கெட்ட நிலைமையிலிருக்கும்போது உன்னை விட்டு விலகுகிறவர்களைப் பகைவர்களென்று எண்ணு. நீ நல்ல நிலைமையிலிருக்கும்போது உன்னோடு உறவாடி மகிழ்வதுபோல் நீ கெட்ட நிலைமையிலிருக்கும்போதும் உன்னைக் கைவிடாது உனக்கு உதவிபுரிபவர்களை நீ உன் நேசரென்று எண்ணு.

சாம்பிராணியைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி வைத்திருந்தால் வாசனை வீசுமா?—விதையைப் பூமியில் விதைக்காவிட்டால் முளைக்குமா?—தனவான் பொருளைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவைத்தால் புகழ்ச்சி ஏற்படுமா?-ஏற்படாதாகையினால் தனவான் பொருளைத் தரும வழியிற் செலவுசெய்து புகழைத் தேடிக்கொள்ள வேண்டும்.

பொருளை நல்லவழியிற் செலவு செய்கிறவர்கள் கடவுளுக்கு இனியவர்களாகிறார்கள்! அதாவது புண்ணிய புருஷர்களாவார்கள். பொருளை அநாவசியமாய் வீண்செலவு செய்கிறவர்கள் கடவுளுக்குத் துரோகிகளாவார்கள்; அதாவது பாவிகளாவார்கள்.

ஒருவன் தன்னாற் கூடியவரையில் இன்னொருவனுக்கு எந்த விதத்திலும் துன்பத்தை உண்டாக்குவது கூடாது. வழியில் கிடக்கும் முட்களை யெடுக்கிறவனுக்குச் சிறந்த புண்ணியப்பயனுண்டென்று சாஸ்திரங் கூறுகிறது.

எந்த எந்தக் காலத்துக்கு எதுஎது தக்கதோ அதையே செய்தல் வேண்டும். பகலில் விளக்கெரிப்பவன் இரவில் எண்ணெயில்லாமல் கஷ்டப்படுவானல்லவா?

ஒருவன் ஒரு பெரியவரைக் கண்டு "தாங்கள் மனிதனைக்கண்டால் மரியாதை செய்கிறீர்களே, இதை யாரிடத்தில் கற்றுக்கொண்டீர்கள்?" என்று கேட்டான். பெரியவர் "மனிதரைக்கண்டால் மரியாதை செய்யாத மடையர்களிடமிருந்து கற்றுக்கொண்டேன்" என்றார். அவன், "அது எப்படி?" என்று கேட்டான். பெரியவர், "அம்மடையர்கள் செய்த அவமரியாதைகளைக்கண்டு அவற்றை நான் விட்டுவிட்டேன்" என்றார்.

மேகம்—காற்று- சந்திரன்-சூரியன் - வானம் - பூமி யாவும் கடவுளின் கட்டளைப்படி உனக்காகக் கஷ்டமெடுத்துக் கொள்கின்றன. ஆதலால் உனக்கு ஒரு

ரொட்டி கிடைக்குமானால் அதை நீ கடவுளை நினைக்காமல் அருந்துவது நியாய மல்லவென்று பெரியார் கூறுகின்றனர்.

அறிந்தவர்கள் குதர்க்கம் பேசமாட்டார்கள். அறியாதவர்களே எந்தவிஷயத்திலும் குதர்க்கம் பேசி வீண் வம்பு வளர்ப்பார்கள். வீண்வம்பு வளர்ப்பவர்கள் பிறர்க்குத் தீங்கு விளைவிப்பதுடன் தங்களையும் தீமைக்குள்ளாக்கிக் கொள்கிறார்கள். ஆகையினால் வீண்வம்பு வளர்ப்பதிலே விருப்புடையவர்கள் இந்த நுட்பத்தைக் கவனித்துத் தங்களுடைய அந்த மதியைச் சீர்திருத்திக்கொண்டு தங்கட்கும் பிறருக்கும் இதமான காரியங்களிலே கவனஞ் செலுத்த முன்வர வேண்டும்.

– —

தங்கமூக்குடையவர்.

டென்மார்க்கு தேசத்தில் டைக்கோ பிராக் என்னும் வானசாஸ்திரி ஒருவர் இருக்கிறார். அவர் தன் எதிரியுடன் சண்டை போட்டபோது அவருடைய மூக்கு நசுங்கிவிட்டது. ஆதலின் அவர் ஆஸ்பத்திரிக்குச் சென்று மூக்கை சுத்தமாக அறுத்துவிட்டு தங்கத்தால் மூக்கைப்போல் செய்து தைத்துக் கொண்டிருக்கிறார். அது அவருடைய படங்களிலும் நன்றாகத் தெரிகிறது. அதனால் அவர் எத்தகைய குறையுமில்லாமல் சுவாசித்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்.

பிள்ளை வரம் பெற்ற பிரபு

ஒரு கிராமத்தில் ஒரு தனவந்த ரிருந்தார். அவர்க்குக் குழந்தைகளில்லாக் குறை யொன்றைத் தவிர வேறு எந்தக் குறையுமில்லை. அந்தக் குறை அவரை மிகவும் பாதித்தது. அதனால் அவர் பெரியவர்கள் பலரிடம் ஆலோசனைசெய்து அவர்கள் ஆணையின்படி காசி ராமேசுவர யாத்திரை போய்வந்து அநேக தானதருமங்களைச் செய்தார். அவருடைய மனைவி சஷ்டி விரதம், கிர்த்திகை விரதம், அசுவதப் பிரதக்ஷிணம் முதலியன செய்து வெள்ளிக்கிழமை தோறும் சுமங்கலிகளுக்குப் போஜனம் செய்வித்து வெகு நியமத்துடனிருந்து வந்தாள்.

இவ்விருவருடைய இத்தகைய தவ விரதங்களைக் கண்ட ஊராரும் உறவினரும்—"ஆகா! இன்னும் இவர்களிடம் ஈசன் கருணை பாலிக்கவில்லையே! யாரே இவர்கள்போல் தவமிருந்தவர்கள்" என்று பேசிக்கொண்டார்கள்.

இப்படி யிருக்கையில் ஈசுவரனுடைய கிருபையால் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்த ஆண் குழந்தையை அவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தார்கள்; அவனுக்குச் சிவசிதம்பரம் என்று திருப்பெயரிட்டிருந்தார்கள். சிவசிதம்பரம் தகப்பனாரை

" அடே அப்பா, வாடா இங்கே ! இந்த நாற்காலியை எடுத்து எனக்குப் போடு!" என்பான். பிரபு "என் கண்ணே இதோ வந்தேன் " என்று கூறி அவனுடைய ஆணையை, ஓர் அடிமையைப்போல் நிறைவேற்றுவார். சில சமயங்களில் அவர் சிவசிதம்பரத்தினுடைய ஆக்ஞையைச் சிறிது தாமதித்துச் செய்வாரானால் அவன் துறவியாய் விடுவான். துறவியாவதெப்படி என்பீர்கள்.—சிவசிதம்பரம் வீட்டை விட்டுப் புறப்பட்டுப் பக்கத்திலிருக்கும் சிவன் கோவிலுக்குப் போய் அங்கொரு திண்ணையிலுட்கார்ந்து கொள்வான். இதுதான் சிவ சிதம்பரம் துறவியாவது.

இப்படி சிவசிதம்பரம் துறவியாவானானால் பிரபுவும் அவர் மனைவியும் அடே சிவசிதம்பரம் சிவசிதம்பரம் — என் கண்ணே, கண்மணியே என்று கூப்பிட்டுக்கொண்டு ஓடிக் கோவிலுக்குப்போய் அந்தத் திண்ணையைப் பார்ப்பார்கள். சிவசிதம்பரம் கோபந்தணிந்து கலீரென நகைப்பான். அவன் நகைப்பதைக் கேட்டதும், தாய்தந்தைய ரிருவரும் ஆநந்தபரவசராய் " என் கண்ணே !" என்பார்கள். உடனே சிவசிதம்பரத்தினுடைய அன்னை அவனை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போவாள். வீட்டுக்குப் போனதும் இரண்டு கைகளிலும் நிறையப் பக்ஷணம் கொடுத்துத் தின்னவைத்து மகிழ்வாள்.

இப்படி ஒருநாளில் குறைந்தது இரண்டு முறையாவது நடக்கும். சிவசிதம்பரம் இந்த மாதிரி வளர்ந்து வந்து பத்தாவது வயதை யடைந்தான். பத்து

வயதை யடைந்த அவனுக்கு அ—என்கிற அக்ஷரமும் தெரியாது. படித்தால் குழந்தையினுடைய உடம்பு இளைத்துப்போகும் என்பது பெற்றோருடைய எண்ணமாகையினால் அவர்கள் சிவசிதம்பரத்தைப் படிக்க வைக்காமல் அவன் மனம் போனபடி விளையாட விட்டு வேடிக்கை பார்த்து வந்தார்கள். அவன் விருப்பப்படி இருவரும் பம்பரம்போல் ஆடி வந்தார்கள்.

இந்தப் பத்து வயதிற்குள் சிவசிதம்பரத்துக்கு வாங்கித்தந்த உடைக்கும் ஆபரணத்துக்கும் அளவில்லை. சிவசிதம்பரம் ஒரு விலையுயர்ந்த பட்டைக் கிழித்தால் அவனுடைய பெற்றோர்கள் நகைப்பார்கள். ஓர் ஆபரணத்தை ஒடித்துவிட்டால் அவனுக்கு ஒரு முத்தந் தருவார்கள். ஒரு பாத்திரத்தை உடைத்துவிட்டால், "என் கண்ணே ! நீ உடைக்கத்தானே இந்த வீட்டிலுள்ள பாத்திரங்களெல்லா மிருக்கின்றன. போனாற் போகிறது"—என்பார்கள்.

பல சொல்வானேன். இப்படிப் பலவிதத்திலும் அவனிடம் தாய் தந்தையரிருவரும் அன்பு பாராட்டினார்கள். இவர்கள் இவ்வாறு காட்டிய அன்பு சிவசிதம்பரத்தை ஒரு பெரிய துஷ்டனாக்கியதே தவிர நல்லவனாக்கவில்லை. அவன் அறிவும் மழுங்கியது. ஆகவே சிவசிதம்பரம் மதோன்மத்தனானான். சில வருஷங்கள் வரையில் சிவசிதம்பரம் தன் பெற்றோரிடம் தன் வித்தைகளை யெல்லாம் காட்டி வந்தான். அப்பால் ஊராரிடமும் காட்டத் தொடங்கினான். ஊரார், பெரிய மனிதனுடைய பிள்ளை என்று பல குற்றங்களை மன்னித்தார்கள்; பின் கண்டிக்கவும்

தலைப்பட்டார்கள். யாருடைய கண்டிப்புக்கும் அவன் அஞ்சவில்லை. பின் அவனைச் சிலர்தண்டிக்கத் தலைப்பட்டார்கள்.

சிவசிதம்பரம் அவற்றிற்கெல்லாம் அஞ்சவில்லை. ஆனால் சிவசிதம்பரத்தினுடைய தந்தையும் தாயும் அவனுடைய துஷ்டச் செய்கைகளைக் கண்டு அஞ்சினார்கள்; "இப்படிப்பட்ட துஷ்டப் பிள்ளையைப் பெறவா நாம் தவம்புரிந்தோம்?" - என்று வருந்தினார்கள். ஆனால் தாங்கள் அவனை வளர்த்த ஒரு தன்மையை எண்ணவே இல்லை. அது அவர்களுடைய மனதிற் படவேயில்லை.

இப்படியிருக்கையில், சிவசிதம்பரம் தந்தைக்குத் தெரியாமல் பொருளை வீட்டிலிருந்தெடுக்கவும் மனம்போனபடி செலவழிக்கவும் தலைப்பட்டான். வரவரப் பிறரிடம் கடன் வாங்கவும் சொத்தை அதற்காக ஈடு வைக்கவும் தன்னுடைய துஷ்ட நண்பர்களுக்குப் பிணைபடவும் கூத்துப் பார்க்கவும் தாசிவீடு செல்லவும் துணிந்தான். அவனுடைய தந்தை சொன்ன புத்திகளெல்லாம் வீணாயின. என்ன செய்வார் அவர்! "அந்தோ! இந்தப்பிள்ளை யேன் பிறந்தது நமக்கு?" என்று வருந்தினார்.

சிவசிதம்பரத்துக்குத் தில்லையம்பலம் என்று ஒரு நண்பனிருந்தான். அவன் குணத்திலும் நடவடிக்கையிலும் சிவசிதம்பரத்துக்கு அண்ணன். அவனும் இவனும்சேர்ந்து, நெல்வியாபாரம செய்யத் தொடங்கினார்கள். வியாபாரந் தொடங்கி ஒரு வருஷகாலத்துக்குள் பெரும் பொருள் நஷ்டம் ஏற்பட்டது. அதற்காக

இருவரும்சேர்ந்து கையெழுத்துப் போட்டு வட்டிக்குக் கடன் வாங்கினார்கள். வட்டி நாளுக்குநாள் விஷ மேறுவதுபோல் வளர்ந்து வந்தபடியால் இருவரும் அதை யொழிக்கப் பலவழிகளில் முயற்சி செய்து பார்த்தார்கள். ஒரு முயற்சியும் பயன்படவில்லை. அப்பால் இருவரும் சேர்ந்து பலதுஷ்டர்களைத் துணை சேர்த்துக்கொண்டு ஒரு பாங்கில் கொள்ளையடித்தார்கள். அந்தக் கொள்ளையில் கைப்பற்றிய நகைகளிற் சிலவற்றைச் சிவசிதம்பரம் தன் வீட்டிற் கொண்டுவந்து வைத்திருந்தான்.

போலீஸார் இத்திருட்டைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யலாயினர். சிலநாட்களில் சிவசிதம்பரமும் தில்லையம்பலமும் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள். பின் சிவசிதம்பரத்தின் வீட்டைப் பரிசோதிக்கையில் கொள்ளைபோன நகைகள் கிடைத்தபடியால், அவனுடைய தந்தையும அக்கொள்ளையில் சம்பந்தப்பட்டிருத்தல கூடும் என்கிற அநுமானத்தினால் அவரையும் போலீஸார் கைது செய்துவிட்டனர். என்ன செய்வார் பிரபு. "அந்தோ- பிள்ளையில்லையென்கிற ஒரு குறையோடிருந்தேனே. அப்படியேயிருந்து விட்டேனா? - பிள்ளைவேண்டுமென்று ஏன் தவமிருந்தேன்? தவமிருந்த போது மார்க்கண்டேயரை யீன்ற மிருகண்டு மகரிஷி கேட்டது போல் நல்ல குணவானாகிய பிள்ளை வேண்டுமென்று ஏன் கேட்கவில்லை?-என்புத்தியை என்னென்று சொல்வது?-இருக்கட்டும். பிள்ளையை யடைந்தபின் அவன் நல்ல வழிகளைப்பின்பற்றி நடக்கவும் நல்ல அறிவைப்

பெறவும் தக்கபடி அவனுக்குக் கல்வியைப் போதித்தேனா? அதுவும் செய்யவில்லையே. என்னிலும் மூடனிருப்பனோ உலகத்தில். பிள்ளை வேண்டுமென்று தவமிருந்தேன். கடவுளின் அநுக்ரகத்தால் பிள்ளைப்பேற்றை அடைந்தேன். அந்தப் பிள்ளையைப் படிக்கவைக்காத தோஷத்தினால் இந்தத் துன்பத்தை அடைகின்றேன். ஆகா- நல்ல குணவானாகிய பிள்ளையை யடைந்தவனை விடப் பாக்யசாலி கிடையாது. தீயகுணமுடைய பிள்ளையைப் பெற்றவனைவிடப் பாபியுமில்லை. ஆகையினால் - பிள்ளையில்லை யென்கிற குறையிலும் துஷ்டப் பிள்ளையைப் பெற்றவனுடைய குறை கொடியதென்பதை உணர்ந்தவன், பிள்ளைப்பேற்றை யடைய விரும்பித் தவம் புரியும்போது புத்திசாலியான பிள்ளை வேண்டும் என்று விரும்பாமலிருப்பனோ?- என்ன செய்வதினி? அரைக்காசுக்குப் போனமானம் ஆயிரம் காசு கொடுத்தாலும் வருமா?" என்று வருந்திச் சிறைச்சாலையிலேயே உயிரை விட்டார். கணவன் இறந்த சில நாட்களில் அந்தத் துன்பந் தாளமாட்டாமல் அவர் மனைவியும் இறந்தாள். ஆனால் சிவசிதம்பரம்- ஒரு வருஷகாலம் சிறைச்சாலை வாசஞ்செய்து தில்லையம்பலத்துடன்- நானே. மல்லுக்கேற்ற மகாதேவன்- என்பதுபோல் மானத்தை விற்ற மகாதேவன்- என்று வெளியேவந்து செத்தபிணமாக உலாவினான். துஷ்டப் பிள்ளையால் நேரிட்ட துன்பங்களை, அவன் தன்னுடைய உருவத்தால் உலகுக்குணர்த்தி வந்த ஒரு புண்ணியம் அவனை நாம் நமது பாலவிநோதினியில் ப்ரஸ்தாபிக்க இடந்தந்தது.

ஆபத்திலும் பொறுமை வகித்த அறிஞன்.

ஒரு பிரபுவுக்கு ஏழு பிள்ளைகளும் மூன்று பெண்களுமிருந்தனர். அவன் ஏழாயிரம் ஆடுகளும் மூவாயிரம் ஒட்டகங்களும் ஐந்நூறு ஜோடி எருதுகளும் ஐந்நூறு கழுதைகளும் வைத்திருந்தான். இவைகளைத் தவிர அவனுக்கு அநேக வேலைக்காரர்களுமிருந்தனர்.

பிரபு ஒரு நாள் தன் வீட்டு மேன்மாடியில் சந்தோஷமாய் உட்கார்ந்திருந்தான், அச்சமயத்தில் ஒருவன் "ஐயா ஐயா" என்றலறிக்கொண்டோடி வந்து "உங்களுடைய கால் நடைகளுக் கெல்லாம் ஆபத்து வந்துவிட்டது. எருதுகளெல்லாம் வயல்களில் உழுது கொண்டிருந்தன. கழுதைகளெல்லாம் காட்டில் மேய்ந்து கொண்டிருந்தன. கொள்ளைக்காரர்கள் வந்து அவைகளை யெல்லாம் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள்; எல்லா வேலையாட்களையும் குத்திக் கொன்றுவிட்டார்கள். நான் ஒருவன் மாத்திரம் தப்பி வந்தேன்" என்றான்.

இதற்குள் இன்னொரு வேலையாளோடிவந்து "ஐயா. ஒரு கெட்ட செய்தி! ஒரு கெட்ட செய்தி! உங்களுடைய ஆட்டுமந்தையின்மேல் இடிவிழுந்து அவையெல்லாம் இறந்து போய்விட்டன. ஆடு மேய்ப்பவர்களில் என்னைத் தவிர எல்லோரும் இறந்து போய்விட்டனர்." என்றான்.

இதற்குள் இன்னொருவன், 'ஐயோ' என்னும் குரலுடன் ஓடிவந்து' "உங்களுடைய ஒட்டகங்களை யெல்லாம் கொள்ளைகாரர்கள் ஓட்டிக்கொண்டு போய் விட்டனர். என்னைத் தவிர மற்றவர்களை யெல்லாம் கொன்றுவிட்டனர்" என்றான்.

இப்பொழுது நான்காவதாக ஒருவனோடி வந்து 'ஐயா உம்முடைய ஏழு பிள்ளைகளும் மூன்று பெண்களும் பங்களாவின் பின்புறததுத் தோட்டத்துக் கொட்டகையில் உட்கார்ந்து காபி யருநதிக் கொண்டிருந்தனர். திடீரென்று கொட்டகைச் சுவரிடிந்து விழுந்து எல்லோரும் இறந்து போயினர்" என்றான்.

இவைகளைக் கேட்டவுடன், பிரபு ஆ! ஆ! என்றலறிக் கீழே விழுந்து எழுந்து, தலை குனிந்து பின் நிமிர்ந்து பார்த்து- "ஆ - ஆண்டவனே, நான் குழந்தையாயிருந்தபோது, என் தேக உறுப்புகளைத்தவிர வேறொன்று மில்லாதவனாக விருந்தேன். நான் இந்த உலகத்தை விட்டுப் போகும் போது என்னுடன் எதையும் கொண்டு போவதில்லை. கடவுள் எனக்குப் பொருளையும் ஆடு, மாடு, ஒட்டகம், வேலையாட்கள் எல்லாவற்றையும் கொடுத்தார். கடவுளே இப்போது எல்லாவற்றையும் கொண்டுபோய்விட்டார். அவரை நான் இச்சமயம் வாழ்த்துகிறேன், அவரையன்றி ஓர் அணுவும் அசையா தன்றோ!" என்றான்.

பின் சில நாட்களில் அந்தப் பிரபுவுக்கு ஒரு பெரிய நோய் வந்தது. அவன் படுக்கையில் படுத்தான் அப்பொழுது அவன் மனைவி அழுதாள். அந்தப் பிரபு

மனைவியைப் பார்த்து, 'ஏன் அழுகின்றாய்? கடவுளிடமிருந்து நாம் நன்மைகளை யடைந்தோம். அது போல் இப்போது தீமைகளை யடைந்தோம். ஏன் விசனப்படுகிறாய்?" என்று பொறுமையோடு விடை தந்தான்.

ஆபத்துக் காலத்திலும் சம்பத்துக்கூடிய சமயத்திலும் பொறுமையை வகிப்பவனே விவேகியாவான். எல்லாம் ஈசன் செயலாகையினால், நாம் மனம் வருந்துவதினால் வருவ தென்னுண்டு?- வாழ்வும் தாழ்வும் என்றும் ஒரு தன்மையிலிரா. அவை யிரண்டும் சகடக்கால் போல் மாறிமாறி வந்து கொண்டே யிருக்கும். இது பற்றி ஆங்கிலப் பழமொழி யொன்றுண்டு.

'The bulbul is'not always singing in the garden;
The garden is not always in bloom;
Kings are not always reigning in happiness
Lovers are not always together".—

நாம் எப்போதும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளச் சித்தமாய் இருக்க வேண்டும். சுகம் அநுபவிக்கும் காலத்தில் கால் தலை தெரியாமல் திரிவது கூடாது.

லக்ஷம் பவுன் பெறும்படியான வீடு ஒன்று லண்டனில் இருக்கிறதாம்.

பெரியவருடைய சாபம் கொடிது.

துரியோதனனால் காட்டிற் கனுப்பப்பட்ட பாண்டவர்களைக் கண்ட ஒரு முனிவர் அவரிடம் பரிதாபங் கொண்டு, அத்தினபுரம் போய்த் துரியோதனனைக் கண்டு, 'வேந்தே! பாண்டவர்கள் கஷ்டப்படுகின்றனர். அவர்கள் நிரபராதிகள். அவர்களை நீ காட்டுக்கனுப்பியது நியாயமல்ல. அது நீதிவழியே அரசுபுரியும் மன்னனுக் கடுத்ததல்ல. நீ உன் அறியாமையினால் அவ்வாறு செய்தாயென்று வைத்துக் கொள்வோம். இக்கணமே நீ அவர்களை நாட்டுக் கழைத்து அவர்களை நல்ல வாழ்க்கையில் வைத்து உன் பிழையை மன்னிக்கும்படி கேட்டுக்கொள். நான் சொல்வதைக்கேள். நான் யார் தெரியுமா? நான் எல்லோரையும் சமமாகப் பாவிப்பவன்! ஒருவர் பங்கிலிருந்து இன்னொருவனுக்குத் தீங்கிழைக்கும் குணமுடையவனல்லன். பாண்டவர்கள் சாதுக்களாகையினால் அவர்களுக்கு இதஞ் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்துடன் உன்னிடம் வந்தேன். எனக்கென்று எந்த லாபத்தையும் கருதாத என் சொல்லைக்கேள். நீ புகழ்ச்சி யடைவாய் நலம் பெறுவாய்! பெரியாருடைய ஆசீர்வாதம் உனக்குக் கிடைக்கும்''-என்றார்.

துரியோதனன் துஷ்டனாகையினால் அந்தப் பெரியவரை அலட்சியமாய்ப் பேசி, பாண்டவர்களுக்கு நன்மை செய்ய மறுத்தான். பெரியவராகிய முனிவர்

முனிவடைந்து, துரியோதனனைக் கண்களிற் கனற்பொறி பறக்கப் பார்த்து, "நான் நியாயம் பல எடுத்துக் கூறியும் என் பேச்சுக் கிணங்காமல் என்னை நீ அவமதித்த படியால், உன் புத்திர மித்ராதிகளுடன் குருக்ஷேத்திரத்தில் குருதி கக்கிச் சாகக் கடவாய்'' என்று கடுஞ் சாபந்தந்து சென்றார். துரியோதனன் அம் முனிவருடைய சாபப் படியே மரணமடைந்தான். நாம் பெரியவருடைய கோபத்திற்காவது சாபத்திற்காவது ஆளாவது கூடாது. பெரியவருடைய பேச்சைக் கேட்கவேண்டும். அதனால் நன்மையுண்டாகுமே தவிர தீமை ஒருபோதுமுண்டாகாது.

கலியுகதோஷம்

அம்புவியின் மிக்க மெய்ஞ் ஞானியைக் கண்டாலும்
அதுவு மொரு வேஷ மென்பார்.-
ஆகமபுராணமறு நூல் விரும் பார்கள் பரி
யாச கதையே மெச்சுவார்-
கம்பமிசை ஒரு கோடி கரண மிட்டாலுமது
கண் கட்டு வித்தை யென்பார்
கற்பனை யலங்காரமாக்கவிகள் பாடினும்
கற்றவர்க் கெளிய வென்பார்
நம்பி விசுவாசமொடு துதி செய்யினுங்கள்ள
ஞான மென்பார்கள் அவைபோல்
நயந்த கலியுகமகிமை நின்னையுஞ் சிலபேர்
நவின்று குறைசொல்வர் கண்டாய்
வம்பவிழ் மலர்ச் சோலை மலையலங் காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கை மணவாளனே
வரத வேங்கட ராயனே

கலியுக தோஷம் இத்தகைய தன்மையிலிருக்கின்ற படியால் பெரியவர்கள், உலகத்தில் தற்காலத்தில் ஜாதிச்சண்டை, மதச்சண்டை, ஆசாரச் சண்டை, இவைகளின் சம்பந்தமாய் நடக்கும் சீர்திருத்தங்களைக் கவனியாதிருக்கின்றனர். ஆனால் அப்படியிருக்கும் அப் பெரியார்களை எங்களுடைய வினாக்களுக்கு விடை தராமலும் சீர்திருத்தங்களை அங்கீகரியாமலு மிருக்கும் இவர்களே தேசத்துரோகிகள் என்று கலியுக நாகரிகப் பிரியர் இகழ்கின்றனர். இவர்களுடைய இகழ்ச்சியினால் அவர்கட் காவதென்ன? - ஒன்றுமில்லை யென்பது திணணம்.

சமீப காலத்தில் கலியுக நாகரிகப்பிரியரான ஒரு சாஸ்திரி, கர்ப்பவதியாயிருந்த தன் மனைவியினு தவிக்காக வெளியூரிலிருந்த தன் அன்னையைத் தந்தியடித்து வரவழைத்தான். அந்த அம்மாள் அச்சமயம் தேக அசௌக்கியமுடையவளாயிருந்த படியால் உதவிக்கு விதவையான தன் தங்கையையும் அழைத்துக் கொண்டு போனாள்.

சாஸ்திரி, ஒருவர்க்கிருவராகத் துணை வந்ததைக் கண்டு சந்தோஷப்படுவதை விட்டு, கடுங்கோபங் கொண்டு தாயாரைப் பார்த்து, 'ஏ பிசாசே, நான் உன்னை மாத்திரந் தானே வரும்படி தந்தியடித்தேன். நீ உன்னோடு இன்னொரு மொட்டைப் பிசாசை யேன் அழைத்து வந்தாய்?-இரண்டு பேருக்கும் சோறு கொட்டுவது யார்? - இருவருக்குச் சோறு போட என்னாலாகாது. நீ உன்னுடன் வந்த மொட்டைப்

பேயையும் அழைத்துக்கொண்டு இந்த க்ஷணமே நட. நிற்காதே! நின்றால் அடிபட்டுச் சாவாய். கழுத்தைப் பிடித்து நெட்டுவேன்!-" என்றான்.

மனைவி, 'ஐயோ, ஏன் அன்னையைச் சினந்து கொள்கிறீர்கள்? இரண்டு பேரு மிருந்துவிட்டுப் போகட்டுமே. இரண்டுபேர் ஒரு மாதத்திற்குச் சாப்பிடுவதனால் நமக்கு என்ன குறைந்து விடப்போகிறது?" என்று சொன்னாள்.

சாஸ்திரி, உடனே மனைவியின் அருகே சென்று, "நீ பேசாமலிரு. உனக்கு விஷயந் தெரியாது. என் தாயார் தன்கையில் ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாய் வைத்திருக்கிறாள். நான் நான்கு வருஷ காலமாய் ரூபா ஐந்நூறு எனக்குத் தரும்படி கேட்கிறேன். கொடுக்க மனமில்லாமல் வயிற்றெரிச்சலை உண்டாக்குகிறாள். அவளுக்கு இப்படிப்பட்ட அவமான முண்டாக்கினால் தான் வழிக்கு வருவாள்' என்று மெது வாய்ச் சொல்லிவிட்டுத் தாயாரிடம் வந்தான். தாயார் கண்ணீர் தாரை தாரையாக ஒழுக, "எனக்கு உடம்பு அசௌக்கிய மாகையினால் என் தங்கையையும் துணைக்கு அழைத்து வந்தேன். இதற்கேன் பிரமாதப் படுத்துகிறாய்? நீ அவளுக்குச் சோறு போடவேண்டாம். நான் என் கைப்பணம் செலவழித்து அவளுக்குச் சாப்பாடு போட்டுக்கொள்கிறேன்" என்றாள்.

சாஸ்திரி, "ஓ அந்த வேடிக்கை வேறு செய்து எனனை இந்த இடத்தில் அவமானப்படுத்தப் பார்க்கிறாயா? நட. நீ உன் பிள்ளைகளுக்கு உதவி செய்யமாட்

டாய். உன் பெண்களுக்கும் உன் பெண்களுடைய பெண்களுக்கும் உதவி செய்வாய். அவர்கள் தான் உனக்குச் சாதிப்பவர்கள்! நீ அங்கேயே போ" என்று அதட்டிக் கழுத்திற் கைகொடுத்துத் தள்ளினான்.

தள்ளவே, தாயார், 'அடபாவி, பழிகாரா!' என்று கூறிக்கொண்டே கீழே விழுந்தாள். விழுந்ததும் அவளுடைய ஒரு காலில் முழங்கால் பக்கம் நரம்புப் பிசகேற்பட்டு அவள் நடக்க முடியாதவளானாள். அதனால் சினங்கொண்டு 'அடே, கொலைகாரா! சதிகாரா!- உனக்கு இப்போது பிறக்கப்போகும் குழந்தை நொண்டியாய்த் தான் பிறக்கப்போகிறது. தாயார் சாபம் வீண் போகாது" என்று சாபந் தந்து மெதுவாய் எழுந்து அழுதுகொண்டே தன் தங்கையுடன் நடந்து, அவ்வீட்டை விட்டு வெளிப்பட்டு அருகேயிருந்த தன் உறவினர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து தன் குறைகளைக் கூறி ஒரு குரல் பிலாக்கணம் பாடி அழுது ஓய்ந்தாள். உறவினர் அவ்விரு மாதரிடமும் இரக்கம் பாராட்டி ஆதரித்தனர்.

பின் இரண்டு வாரத்திற்கெல்லாம் சாஸ்திரிக்குக் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு இரண்டு கால்களும் முடமாயிருந்தன. அது கண்ட சாஸ்திரி, 'ஆகா, கலியுகத்தில் தாயாருடைய சாபத்திற்கு இப்படிப் பட்ட பலமிருக்கிறதா?" என்று வியப்புற்று, "என்ன செய்வதிந்தத் தொல்லைக்கு" என்று தன் மனைவியுடனும் தன்னைச் சேர்ந்தார் சிலருடனும் ஆலோசனை செய்தான். அவர்கள், "நீ உன் அன்னையைக் கண்டு

அவளுடைய பாதாரவிந்தத்திற் பணிந்து மன்னிப்புக் கேட்டுக்கொள். அவளையும் அவள் தங்கையையும் அழைத்து வந்து உணவிட்டு ஆதரித்துவா. அந்த உத்தமி மனமிரங்கி ஆசீர்வாதம் செய்வாளானால் சாபவிமோசனம் ஏற்படும்" என்றார்கள்.

சாஸ்திரி, மனைவியினிடம் போய் "நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான். மனைவி, "இந்த நிமிஷமே போங்கள். போய், ஒரு நமஸ்காரத்துக்கு ஒன்பது நமஸ்காரங்களைச் செய்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவர்களை அழைத்து வாருங்கள்" என்றாள்.

சாஸ்திரி, அப்பால் சிறிதும் ஆலோசனை செய்யாமல் தாயாரிருக்கும் வீட்டிற்குப் போய் அவளுடைய திருவடியிற் பணிந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வீட்டிற்கு வரும்படி அழைத்தான். "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்று சொல்வதுண்டல்லவா? அதற்கிணங்க, அந்த அம்மாள் மகனுடைய பிழையை மறந்து, "இதோ வந்தேன். தாயாரென்று பாராமல் வாயில் வந்தபடி உளறினாய். என் கோபத்துக் காளானாய். நான் என்ன செய்வேன். நான் உத்தமனுக்கு வாழ்க்கைப்பட்ட உத்தமியாகையினால் என் சாபம் பலித்தது. நான் இப்போது வருந்துகிறேன். உன் சிறிய தாயாரையும் பணிந்து மன்னிப்புக் கேட்டுக்கொள். அவளுடைய பரிபூரணமான ஆசீர்வாதம் அடையும்படியான வழியில் நட. கடவுளுனக்கு அநுக்ரஹம் செய்வார். இனி என்றும் எந்தக்

காலத்திலும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பெரியவர்களுடைய சாபத்திற்காவது கோபத்திற்காவது ஆளாகாதே" என்று புத்திமதிகூறிப் பின் தன் தங்கையையும் தன்னுடன் வரும்படி யழைத்தாள். சாஸ்திரியும் அந்த அம்மாளைப் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டழைத்தான்.

இருவரும் சென்று குழந்தையைக் கண்டு பரிதாபங்கொண்டு-'ஆ கடவுளே! பெண் சிசுவாகிய இதற்கு முட மேற்பட்டது பெருங்குறை யாகையினால் எங்கள் எல்லோருடைய பிழையையும் மன்னித்து, இம்முடம் நீங்கிக் குழந்தை அழகிய திருவுருவத்துடன் விளங்கும்படி திருவருள் புரியவேண்டும்" என்று திருநீறிட்டனர்.

அப்பால் சில நாட்களில் அக்குழந்தையின் கால்கள் முடம் நீங்கிச் சரியான உருவமடைந்தன. இந்த அதிசயத்தை நேரிற் கண்டாரனைவரும் தாய்த் தெய்வத்திற்குள்ள சக்தியை வியந்து பேசினர். கலியுக தோஷப்படி சிறியார் பெரியாரை அவமதித்தல், பிள்ளைகள் தாய்தந்தையரை நிந்தித்தல், சிஷ்யன் குருவை அவமதித்தல், ஈனன் மதிப்புடையவரை இகழ்தல், அகங்காரிகள் தெயவத்தை நிந்தித்தல் யாவும் நிகழுமாயினும் அவர்கட்குத் தண்டனையில்லாமற் போகாதென்பது திண்ணம். அதற்கு நாம் மேலே எடுத்துக் காட்டிய இவ்வுண்மை வரலாறே போதுமான தென்றறிக.

தெய்வ குஞ்சரியம்மை திருமணக் கும்மி.

காப்பு

சீர்பரவும் தெய்வ குஞ்சரியம்மை
திருமணக்கும்மி தமிழ்ப்பாடப்
பார்பரவும் தெய்வ சித்திவிநாயகன்
பாத மலர்த்துணை காப்பாமே.

நடேசர் துதி

ஐந்தொழிலா நந்த நர்த்தனங்கண்டார்
அன்னை கருப்பையி லின்ன மின்னம்
வந்து பிறவாத வாழ்வரு ளம்பல
வாண னடிமலர் காப்பாமே.

சிவகாமசுந்தரி

அண்ட சராசரம் யாவையுந் தந்தளித்
தாணவபாசம் அறுத்தருளும்
வண்டணி கூந்தற் சிவானந்தவல்லி பொன்
மாமலர்ப் பாதத்துணை துணையே.

முருகேசர் துதி

சூரனைச் சிங்கனைத் தாரகனைக்கொன்று
சொர்க்கநா டிந்திரனுக் களித்த
வீரப்பிரதாப சிங்கார ஓங்காரவை
வேற் குமரேசன் வருந்துணையே.

குரு வணக்கம்

பாவாணர் சங்கத்தி லெற்குமிடந்தரம்
பன்னூ லிலக்கணமான வெல்லாம்
தாவா தருள்செய் சிவானந்தசாகரன்
தாட்டுணை யென்றுந் துணை துணையே.

காலத்திலும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பெரியவர்களுடைய சாபத்திற்காவது கோபத்திற்காவது ஆளாகாதே" என்று புத்திமதிகூறிப் பின் தன் தங்கையையும் தன்னுடன் வரும்படி யழைத்தாள். சாஸ்திரியும் அந்த அம்மாளைப் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டழைத்தான்.

இருவரும் சென்று குழந்தையைக் கண்டு பரிதாபங்கொண்டு-'ஆ கடவுளே! பெண் சிசுவாகிய இதற்கு முட மேற்பட்டது பெருங்குறை யாகையினால் எங்கள் எல்லோருடைய பிழையையும் மன்னித்து, இம்முடம் நீங்கிக் குழந்தை அழகிய திருவுருவத்துடன் விளங்கும்படி திருவருள் புரியவேண்டும்" என்று திருநீறிட்டனர்.

அப்பால் சில நாட்களில் அக்குழந்தையின் கால்கள் முடம் நீங்கிச் சரியான உருவமடைந்தன. இந்த அதிசயத்தை நேரிற் கண்டாரனைவரும் தாய்த் தெய்வத்திற்குள்ள சக்தியை வியந்து பேசினர். கலியுக தோஷப்படி சிறியார் பெரியாரை அவமதித்தல், பிள்ளைகள் தாய்தந்தையரை நிந்தித்தல், சிஷ்யன் குருவை அவமதித்தல், ஈனன் மதிப்புடையவரை இகழ்தல், அகங்காரிகள் தெயவத்தை நிந்தித்தல் யாவும் நிகழுமாயினும் அவர்கட்குத் தண்டனையில்லாமற் போகாதென்பது திண்ணம். அதற்கு நாம் மேலே எடுத்துக் காட்டிய இவ்வுண்மை வரலாறே போதுமான தென்றறிக.

தெய்வ குஞ்சரியம்மை திருமணக் கும்மி.

காப்பு

சீர்பரவும் தெய்வ குஞ்சரியம்மை
திருமணக்கும்மி தமிழ்ப்பாடப்
பார்பரவும் தெய்வ சித்திவிநாயகன்
பாத மலர்த்துணை காப்பாமே.

நடேசர் துதி

ஐந்தொழிலா நந்த நர்த்தனங்கண்டார்
அன்னை கருப்பையி லின்ன மின்னம்
வந்து பிறவாத வாழ்வரு ளம்பல
வாண னடிமலர் காப்பாமே.

சிவகாமசுந்தரி

அண்ட சராசரம் யாவையுந் தந்தளித்
தாணவபாசம் அறுத்தருளும்
வண்டணி கூந்தற் சிவானந்தவல்லி பொன்
மாமலர்ப் பாதத்துணை துணையே.

முருகேசர் துதி

சூரனைச் சிங்கனைத் தாரகனைக்கொன்று
சொர்க்கநா டிந்திரனுக் களித்த
வீரப்பிரதாப சிங்கார ஓங்காரவை
வேற் குமரேசன் வருந்துணையே.

குரு வணக்கம்

பாவாணர் சங்கத்தி லெற்குமிடந்தரம்
பன்னூ லிலக்கணமான வெல்லாம்
தாவா தருள்செய் சிவானந்தசாகரன்
தாட்டுணை யென்றுந் துணை துணையே.

(5) வடியாரும் வேற்கணியுண்ணா முலைக்கு மணாளனென்றே
அடியாரைக்கண்டு நற்றோத்திரம்சொல்லி அவரடியை
முடியாரவைக்கு முறையறியாப்பெரு மூடனொரு
படியாய்ச் சமைந்திலனே அருணைபுரிப் பாதையிலே.

(6) கோடானு கோடி பவமேபுரிந்திட்ட கொள்கையினால்
நாடார் நகைக்க உடம்பெடுத்தேனிந்த நானிலத்தில்
கூடாதபாவி இனியேவல் செய்குவன் கோயிற்பசு
மாடாய்ப் பிறந்திலனே அருணைபுரி மந்தையிலே.

(7) நில்லாது காயம் நிலையாது வாழ்விவை நிச்சயமே
பொல்லாத புத்தியை என்படைத்தாய் புரமூன்றெரித்த
வல்லாய் நின்கோயிற் பசுமாடுகள் வயிறார வுண்ணப்
புல்லாய்ச் சமைந்திலனே அருணைபுரிப் பூமியிலே.

(8) சனியான பாவி இளமையிலே யெனைத்தான் பிடித்தே
அனியாயங்கண்டதை யார்க்குரைப்பேனயன்மால்வணங்கு
பனிமா மலைமகள் பாகனுக்கன்பர் பரிந்தருந்துங்
கனியாய்ச் சமைந்திலனே அருணைபுரிக்காவகத்தே.

(9) ஈயாப்பெரும் புல்லர்க்கேயிதஞ்சொல்லி இரந்துழல்வேன்
மாயாப்பிறவியறுக்கும் சிவபெருமான் பதத்தை
ஓயாமற் பூஜைசெய் மெய்யன்பர்சேடத்தை உண்ணு
நாயாய்ப் பிறந்திலனே அருணைபுரி நாட்டினிலே. [மொரு

முற்றிற்று.

பெரியவரின் அரிய உபதேசம்

ஒரு கிராமத்தில் ஒரு பெரியவரிருந்தார். அவர் நல்ல கல்வி யறிவுடைய வயோதிகர். அவர் எப்போதும் தம்மிடம் வரும் சிறுபிள்ளைகளுக்கு நல்ல புத்திமதிகள் பல சொல்வதுண்டு. அவையெல்லாம் கேவலம் சாஸ்திர மார்க்கமாக மாத்திரமில்லாமல் அநுபவவாயிலை யொட்டியவைகளாகவு மிருக்கும்.

இப்படியிருக்கும் அந்தப் பெரியவரிடம் ஒரு சிறு பையன் சென்று வணங்கி, 'ஸ்வாமி, ஜனங்கள் கடவுளைத் தங்களுக்குப் பரம பிதா என்றும் ரக்ஷகரென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்களே! ஏன் அவர் விஷயமாய்ப் பொருள் செலவிடத் தாமே முன் வருவதில்லை" என்று கேட்டான்.

பெரியவர்- 'அப்பா, கடவுள் வஞ்சனை யில்லாதவர். அவர் நாம் காண்கிற பொருள்களையும் நமது கண்களுக்கும் மனத்துக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத பொருள்களையும் படைத்தவர். அவைகளை யெல்லாம் அவர் பிரஜைகளுக்கு யாதொரு பிரதிப்பிரயோசனமில்லாமலே கொடுக்கின்றார். அவ்வாறு அவர் கொடுப்பதனால் ஜனங்களுக்கு அந்த அவருடைய கொடையின் பெருமை விளங்குவதில்லை. அதனாலேதான் ஜனங்கள் அவர் சம்பந்தமாய்ப் பொருள் செலவிடவும் அவரைப் பெருமைப் படுத்தவும் மறந்து விடுகின்றனர். அவர் சில நாள் சூரியனை மறைத்து வைத்

(5) வடியாரும் வேற்கணியுண்ணா முலைக்கு மணாளவென்றே
அடியாரைக்கண்டு நற்றோத்திரம்சொல்லி அவரடியை
முடியாரவைக்கு முறையறியாப்பெரு மூடனொரு
படியாய்ச் சமைந்திலனே அருணாபுரிப் பாதையிலே.

(6) கோடானு கோடி பவமே.புரிந்திட்ட கொள்கையினால்
நாடார் நகைக்க உடம்பெடுத்தேனிந்த நானிலத்தில்
கூடாதபாவி இனியேவல் செய்குவன் கோயிற்பசு
மாடாய்ப் பிறந்திலனே அருணாபுரி மந்தையிலே.

(7) நில்லாது காயம் நிலையாது வாழ்விவை நிச்சயமே
பொல்லாத புத்தியை என்படைத்தாய் புரமூன்றெரித்த
வல்லாய் நின்கோயிற் பசுமாடுகள் வயிறார வுண்ணப்
புல்லாய்ச் சமைந்திலனே அருணாபுரிப் பூமியிலே.

(8) சனியான பாவி இளமையிலே யெனைத்தான் பிடித்தே
அனியாயங்கண்டதை யார்க்குரைப்பேனயன்மால்வணங்கு
பனிமா மலைமகள் பாகனுக்கன்பர் பரிந்தருந்துங்
கனியாய்ச் சமைந்திலனே அருணாபுரிக்காவகத்தே.

(9) ஈயாப்பெரும் புல்லர்க்கேயிதஞ்சொல்லி இரந்துழல்வேன்
மாயாப்பிறவியறுக்கும் சிவபெருமான் பதத்தை
ஓயாமற் பூஜைசெய் மெய்யன்பர்சேடத்தை உண்ணு
நாயாய்ப் பிறந்திலனே அருணாபுரி நாட்டினிலே. [மொரு

முற்றிற்று.

பெரியவரின் அரிய உபதேசம்

ஒரு கிராமத்தில் ஒரு பெரியவரிருந்தார். அவர் நல்ல கல்வி யறிவுடைய வயோதிகர். அவர் எப்போதும் தம்மிடம் வரும் சிறுபிள்ளைகளுக்கு நல்ல புத்திமதிகள் பல சொல்வதுண்டு. அவையெல்லாம் கேவலம் சாஸ்திர மார்க்கமாக மாத்திரமில்லாமல் அநுபவவாயிலை யொட்டியவைகளாகவு மிருக்கும்.

இப்படியிருக்கும் அந்தப் பெரியவரிடம் ஒரு சிறு பையன் சென்று வணங்கி, 'ஸ்வாமி, ஜனங்கள் கடவுளைத் தங்களுக்குப் பரம பிதா என்றும் ரக்ஷகரென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்களே! ஏன் அவர் விஷயமாய்ப் பொருள் செலவிடத் தாமே முன் வருவதில்லை " என்று கேட்டான்.

பெரியவர்- 'அப்பா, கடவுள் வஞ்சனை யில்லாதவர். அவர் நாம் காண்கிற பொருள்களையும் நமது கண்களுக்கும் மனத்துக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத பொருள்களையும் படைத்தவர். அவைகளை யெல்லாம் அவர் பிரஜைகளுக்கு யாதொரு பிரதிப்பிரயோசனமில்லாமலே கொடுக்கின்றார். அவ்வாறு அவர் கொடுப்பதனால் ஜனங்களுக்கு அந்த அவருடைய கொடையின் பெருமை விளங்குவதில்லை. அதனாலேதான் ஜனங்கள் அவர் சம்பந்தமாய்ப் பொருள் செலவிடவும் அவரைப் பெருமைப் படுத்தவும் மறந்து விடுகின்றனர். அவர் சில நாள் சூரியனை மறைத்து வைத்

ஒரு சிறு உதவியையும் செய்ய மனமில்லாத பரமலோபியாயிருப்பார்கள். சிலர் வித்வத்சம்பாவனையை சதஸில் அடைவர். ஆனால் எழுத்து வாசனையே யில்லாதவராயிருப்பர். சிலர்- மனைவிமக்கள் வீடு வாயில்களோடு வாழும் இல்லற நெறியுடையவராக விருப்பர். ஆனால் ஒரு பிச்சைக்காரன் வந்து பிச்சை கேட்டாலும் பிச்சையிட மனமில்லாமல் துரத்துவர்.

செவ்வாய்க்கிழமைக்கு மங்களவாரமென்றும் சுடுகாட்டுக்கு நன்காடென்றும் பெயரேற்பட்டிருக்கிறதல்லவா ?- அதுபோல் பேரளவில் பெரியவராயிருப்பார் பலருண்டாகையினால் மேலே கண்ட பழமொழி வழங்குவதாயிற்று.

ஒருதடவை பேசுவதற்குமுன் அவ்விஷயத்தைக் குறித்து இருதடவைகேள், கேட்பதற்குச் சுறுசுறுப்பாயும் சொல்வதற்குத் தாமதமாயுமிரு.

பேச்சு வெள்ளி யென்றும் மௌனம் தங்கம் என்றும் கூறும் பழமொழியை எப்போதும் ஞாபகத்திலே வைத்துக்கொள்.

மஹாபலிபுரம்.

(மாயக்கூத்தன் எழுதியது)

சென்னையிலிருந்து கடற்கரை யோரமாக சுமார் 35 மைல் நாம் சென்றோமானால் "மஹாபலிபுரம்" என்ற ஊரைக் காண்போம். இவ்வூர் மிகவும் புராதனமான துறைமுகப்பட்டினம் ஆகும். இவ்வூரை முதல் ஆழ்வார்கள் மூவருள் ஒருவரான பூதத்தாழ்வார் என்பவர்

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளம் தண் பொருப்பு வேலை—தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக்கு இடம்.

என்னும் பாசுரத்திலே திருமாலின் இடமாக 'மாமல்லை' என்னும் இவ்வூரைக் குறித்துள்ளார்.

இங்கு விஷ்ணுவுக்குப் பல கோயில்கள் முன் காலத்திலே அமைக்கப்பட்டு விளங்கின என்பது திருமங்கையாழ்வாரின் பாடல்களினின்றும் விளங்குகின்றது. அவ்வாழ்வார் பத்துப் பாசுரங்களாலே தாம் திருமாலை "கடல் மல்லைத்தல சயனத்தே" கண்டதைப் பாடுகின்றார். இவ்வாறு பாடப்பெற்ற பாடல்களின் கடைசிப் பாட்டிலே "பழன வேலித்தட மார்ந்த கடல் மல்லைத்தல சயனத்துத் தாமரைக் கண் துயில் அமர்ந்த தலைவன் தன்னை" என்று குறிப்பதினின்றும்,

இவ்வூர்த் தலசயனக் கோயிலிலே திருமாலின் உருவம் சயன அவஸரமாகக் காணப்பட்டது என்பது தெளிவாகின்றது.

இவ்வாழ்வார் பாடிய காலத்திலே இந்தத் தல சயனக் கோயிலுக்கு இருபுறத்திலும் பரமசிவனுடைய லிங்கங்கள் அமைக்கப்பெற்ற சிவன்கோயில்கள் இருந்தன என்பது இவர் பாடிய வேறு பத்துப் பாசுரங் களினின்றும் தெரியவருகின்றது. அப்பாடல் வருமாறு:—

பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு
இணங்கு திருச்சக்கரத்து எம்பெருமானார்க்கு இடம் விசும்பில்
கணங்கள் இயங்கும் மல்லைக் கடல் மல்லைத் தலசயனம்
வணங்கும் மனத்தாரவரை வணங்குமென் தன் மடநெஞ்சே.

இவ்வாறு திருமங்கையாழ்வார் காலத்திலே பரம சிவனுக்குக் கோயில்களைக் கட்டி அமைத்தவர் பல்லவ அரசர் ஆவர் என்பது மஹாபலிபுரத்திலே இன்றும் காணப்படும் கற்கோயில்களாலும் கல்லிலே செதுக்கப் பட்ட சிலை யுருவங்களாலும் சாஸனங்களாலும் விளக்கப்படுகின்றது.

இவற்றுள் முதன்மை பெற்றவை தருமராஜ ரதம், பீமரதம், அர்ச்சுன ரதம், நகுல ரதம், சகா தேவ ரதம், திரௌபதி ரதம், எனப்படும் கோயில் களே. இவை ஒன்றின் பக்கத்திலே ஒன்றாக அமைந் திருப்பதாலும், இவற்றுளே சிவலிங்கங்கள் காணப் படாததாலும், இவை யெல்லாம் கல்லாலான தேர்க ளெனப் பிற்காலத்தாராலே கருதப்பட்டு வந்தன. ஆயினும் இவைகளிலே காணப்படும் கல் வெட்டு களிலிருந்தும், இவை பல்லவ அரசன் ஒருவனாலே கல்லிலே வெட்டி அமைக்கப்பெற்ற 'கற்றளி' எனப் படும் கோயில்கள் என்பது தெளிவாகின்றது.

தருமராஜ ரதத்தின் மூன்றும் தட்டின் கீழ் புறத்திலே பழைய வடமொழி எழுத்திலே "அத்யந்த காம பல்லவேசுவர கிரஹம்" என்ற எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன.

அவ்வூரிலே இப்போது கணேசர் கோயிலாகக் காணப்படும் கோயிலும் பரமசிவன் கோயிலாக இருந்தது என்பது அக்கோயிலிலுள்ள கல் வெட் டுக்களாலே விளங்குகின்றது. அந்தக் கல் வெட்டி லுள்ள சுலோகங்களினின்றும் அக்கோயிலும் "அத் யந்த காம பல்லவேசுவர கிருஹம்" என்று வழங்கிய தாகத் தெரிய வருகிறது.

'அத்யந்த காமன்' என்னும் பல்லவ அரசன் சிவபக்தருள் சிறந்து விளங்கியவன். இராஜ சிம்மன் என்றும் க்ஷத்திரிய சிம்மன் என்றும் கூறப்படுவோன் இவனே. இவனே தல சயனக்கோயி லின இருபுறத்திலும் பரமசிவனுக்கு இருந்த கோயில் களைக் கட்டி வைத்தவன் என்பது கடற் கரையோ ரத்திலேயுள்ள பழைய தலசயனக் கோயிலிலே இராஜ ராஜ சோழன் செதுக்கிய கல் வெட்டிலிருந்தும தெளிவாகின்றது.

ஆதிகாலத்திலேயே தலசயனக் கோயிலோடு ஒரு "வராஹப் பெருமாள்" கோயிலும் இருந்தது என்பதும் இப்போதுள்ள கோயிலின் உட்பக்கத்திலே 'வராஹப் பெருமாள்' ஸந்நிதியிலே ஒரு பக்கத்திலே செதுக்கப்பட்ட கல் வெட்டினின்றும் புலப்படுகின்றது.

பல்லவ அரசர்களின் காலத்திற்கு முன்பும் கடன்மல்லை காஞ்சீபுர நகரத்திற்கு ஒரு சிறந்த துறைமுகமாக இருந்தது என்றும் பழந் தமிழ் நூல்களாகிய "பத்துப்பாட்டு"களின் ஒரு பகுதியினின்றும் வித்வான் மு. இராகவையங்கார் அவர்கள் ஊகித்துள்ளார்கள்.

இவ்வாறு ஆதிகாலத்திலிருந்து சிறந்து விளங்கி வந்த 'மாமல்லை' என்னும் நகரமானது 'மஹாபலிபுரம்' என்றும் 'ஏழு கோபுரம்' ('Seven Pagodas') "என்றும் பிற்காலத்திலே வழங்கலாயிற்று. இதனை ஆங்கிலக்கவி யொருவர் தமது பாட்டு ஒன்றிலே வருணித்துள்ளார். இந்நகரத்துக் கோபுரங்கள் ஏழு சூரிய ஒளியிலே பிரகாசித்துத் தோன்றி கடல் யாத்திரையாக வரும் மானுமிகளுக்கு வழிகாட்டும் ஒரு தீபஸ்தம்பம் போல விளங்கியதாலே இதற்கு "Seven Pagodas" என்ற பெயர் வழங்குவதாயிற்று.

பல்லவ அரசன் பரமசிவனுக்குக் கட்டிய கோயில்கள் இப்பொழுது பாழுங் கோயில்களாய் விட்டன. தலசயனக் கோயிலும் பாழாய் விட்டது. அக்காலத்திலே துறைமுகமாக விளங்கிய பட்டினமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டது. பிற்காலத்திலே ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு வழி காட்டிகளாக விளங்கிய கோபுரங்களும் கடலாலே கொள்ளப்பட்டுப் போயின. ஆயினும் ஐந்து ரதங்களும் மற்றும் பாழடைந்து போன கோயில்களும் மண்டபங்களும் 'அர்ச்சுனன் தவம்' எனப்படும் சிற்பக்குன்றும் இன்றும் ஐரோப்பியரும் வியக்கத் தக்க வேலைப்பாடுகளாலே சிறந்த சிற்பக் காட்சிகளாக விளங்குகின்றன. பண்டைய இந்தியர்களின் சிற்பச் சிறப்பு ஒரு தடவையாவது இக்காட்சிகளைச் சென்று கண்டு இன்புற்றோர்க்கே விளங்கும். இந்தியாவிலே தொன்றுதொட்டு சிற்ப முதலிய வித்தைகள் பலவும் தெய்வத்தை மானுடர்க்கு உணர்த்தும் தத்துவஞான வழித்துணைகளாகவே அமைந்தன என்னும் உண்மையும் இவ்வூரின் அதிசயங்களை நேரிற் கண்டோர்க்கு நன்கு விளங்கும்.

"திருவிழிகள் வான்முகத்தி லிருந்தாலும்
வானிரவி எழுந்தாலன் றிக்
கருதரிலப் பலபொருளும் காண்டலரி
தாமுலகிற் கண்போல் யாரும்
பெருகிய செல்வமுமறிவும் பெற்றாலும்
நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர் புண்ணியபாவ மிம்மைமறு
மையும்வீடுந் தெரியாதன்றே"

(குற்றாலம் புராணம்)

சிவபக்த சிரோமணி

முன்காலத்தில் வரகுண பாண்டியன் என்னும் ஓர் அரசன் மநுமுறை தவறாமல் மதுரைமாநகரிலிருந்து அரசுபுரிந்து வந்தான். அவன் ஒரு நாள் தேரேறி வீதியிற் செல்கையில் வயோதிகப் பிராமணனொருவன் தேர்க்காலிற் பட்டிறந்தான். அந்த பிர்மஹத்தி அவ்வேந்தனைப் பற்றிச் சிலநாள் வருத்தியது. வேந்தன் அந்தபிர்மஹத்தி நீங்க அநேக பரிகாரங்களைச் செய்து பார்த்தான். ஒன்றாலும் நீங்காமையினால் அரசன் மீனாட்சிசுந்தரரைச் சரணமடைந்தான். அவன் ஆலால சுந்தரரின் ஆலயத்திலிருக்கையில், "வரகுண, நீ திருவிடைமருதூருக்கு வந்து எம்மைத் தரிசித்தால், உன்னைப் பற்றியுள்ள பிர்மஹத்தி நீங்கும்" என்று ஓர் அசரீரி வாக்குண்டாயது. உடனே அரசன் திருவிடைமருதூர் சென்று அங்கிருக்கும் காருண்யாமிருத தீர்த்தத்தில் மூழ்கித் திருவீதி வலம் வந்து கிழக்குக் கோபுரவாயிலின் வழியாய் ஆலயத்திற்குள்ளே போனான். அப்பொழுது அவ்வரசனைப் பற்றியிருந்த பிர்மஹத்தி கோயிலினுள்ளே வர அஞ்சி அந்தக் கோபுரவாயிலிலேயே நின்றுவிட்டது என்னும் இவ்வரலாறு புராணத்திற் சொல்லப்படுகிறது. இது புராணவரலாறாயினும் இதனைப் புராணவரலாறு தானே என்று இகழ்வதற்காவது அலட்சியம் செய்வதற்காவதில்லை. ஏனெனில் நாளைக்கும் சோழநாட்

டினர், எவனையேனும் திட்டுகிறபோது "திருவிடைமருதூர் சோழன் பிர்மஹத்தியே போ" என்று திட்டுவதைக் கேட்கிறோம். அல்லாமலும் திருவிடைமருதூர் ஆலயத்தின் கிழக்குக் கோபுரவாயிலில் அந்தப் பிர்மஹத்தியின் சிலாரூபம் இருக்கின்றது. அதனை ஜனங்கள் கண்டு இந்த வரலாறைப் பேசி வியப்புறுகின்றனர்.

"சொல்லாமற் பிறவாது அள்ளாமற் குறையாது" என்று ஒரு பழமொழியுண்டு. அதுபோல் நடந்திராத ஒரு காரியம் பிரசித்தியடையக் காரணமில்லை யென்பதும் விளங்குகிறபடியால், இந்த வரலாறு உண்மையில் நடந்திருக்க வேண்டுமென்று நிச்சயமாய்த் தெரிகிறது. இப்படி அநேக விஷயங்கள் நம் நாட்டில் உண்டு. இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பவர்க்கே உண்மை விளங்கும்.

திருவிடைமருதூர் ஆலயத்திற்குட் சென்றதும் வேந்தன், ஈசுவர தரிசனம் செய்து வாயாரத் துதித்து மகிழ்ந்து தன் விடுதிக்குச் செல்லப் புறப்பட்டான். அப்பொழுது, "வரகுண, கிழக்குக் கோபுர வாயில் வழியே செல்லவேண்டாம். அங்கே பிர்மஹத்தி நிற்கிறது. மேற்குக் கோபுரவாயிலின் வழியே செல்லக் கடவாய்" என்று அசரீரி வாக்குண்டாயது. அரசன் கேட்டு வியப்புற்று மேற்குக் கோபுரவாயிலின் வழியே வெளிப்பட்டுத் தன் விடுதிபோய்ச் சேர்ந்தான்.

அப்பால் அவ்வரசன் அரசை வெறுத்து ஈசுவர பக்தியி லீடுபட்டுச் சதாகாலமும் சிவத்யானபரனாயிருந்தான்.

பின்பொருநாள் அவ்வரசன் தான் மணந்த மனைவியை, "இவ்வள வழகுடைய இவள் ஈசுவர கைங்கர்யத்திற்கே உரியவள்" என்றெண்ணி அப்பெண் மணியை அழைத்துக்கொண்டு ஆலயத்திற்குச் சென்றான். இராக்காலமானதால் அப்பொழுது கோயிற் கதவு தாளிட்டிருந்தது. அரசன், "மருதப்ப" எனவழைத்துக் கதவைத் தட்டினான். கதவு உடனே திறந்து கொண்டது. அரசன் மனைவியுடன் உள்ளே நுழைந்து, ஸந்நிதியில் நின்று, இப்பெண் தேவரீரின் பணிவிடைக்கே யுரியவள்" என்று அப்பெண்ணை அங்கேயே விட்டுவிட்டகன்றான்.

சிவபெருமான் அப் பெண்ணினுடைய கர மொன்றை மாத்திரம் நீக்கி அப்பெண்ணைச் சிவலிங்கத்தி லயிக்கியம் செய்து கொண்டனர். அரசன் ஆலயத்தை விட்டுச் சென்றதும் கோயில் கதவு சாத்திக் கொண்டது. பின் மறுநாள், அர்ச்சகர் ஸ்வாமி ஸந்நிதியில் வளையலணிந்த ஒரு பெண்ணின் கரமிருக்கக் கண்டு வியப்புற்றனர். இச்செய்தி ஊர் முழுவதும் பரவியது. பாண்டியனுக்கு மெட்டியது. அவனும் கோயில் வந்து பார்த்துத் தன் மனைவியினுடைய திருக்கரமாயிருக்கக் கண்டு, "பாவியேன் தீண்டிய கரமாகையினால் எச்சிலென்று ஒதுக்கினீர்போலும்" என்று கூறி வருத்தமுற்றான். அப்பொழுது, "வரகுண, உன் திருத்தொண்டை உலகினரறிந் துய்யுமாறு வெளியிடும் பொருட்டு இவ்வாறு செய்தனம்" என்றோர் அசரீரி வாக்குண்டாயது. உடனே அந்தக் கரமும் சிவலிங்கத்தினுள்ளே மறைந்தது. இந்த அதிசயங் கண்டு யாவரும் பேராச்சரிய மடைந்து பகவானைப் புகழ்ந்து துதித்து மகிழ்ந்தனர்.

இப்படிப்பட்ட அரிய பக்தியைத் தனக்கு அணிகலனாகப் பூண்டிருந்த அவ்வேந்தன் புகழுடம்பை உலகில் நிலைநிறுத்திச் சிவபத மடைந்து நித்யானந்தப் பேறெய்தினான்.

இங்கிலாந்தில் பல வருஷங்களாகவே புருஷர்களைவிட ஸ்திரீகள் அதிகமாகவிருந்து வந்திருக்கிறார்களாம். 1831-ம் வருஷத்தில் 1000 புருஷர்களுக்கு 1040 ஸ்திரீகளும், 1871-வருஷத்தில் 1054 ஸ்திரீகளும், 1911-ம் வருஷத்தில் 1068 ஸ்திரீகளும், 1921-ம் வருஷத்தில் 1095 ஸ்திரீகளுமாக விருந்தார்களென்று கணக்கின்படி தெரிகிறது. ஆயிரத்துக்கு 68 ஸ்திரீகள் அதிகமாக இருந்த 1911-ம் வருஷத்திலேயே பத்துலக்ஷம் ஸ்திரீகள் அதிகமாகவிருந்தார்களாம். ஆயிரத்துக்கு 95 ஸ்திரீகள் அதிகமாகவுள்ள இந்த வருஷத்தில் எத்தனை ஸ்திரீகள் அதிகமாக விருப்பார்களென்று தெரிந்துகொள்ளலாம்.

மனிதனும் மிருகமும்

பன்றி அசங்கியங்களைத் தின்று கொழுப்பது போல் மனிதனும் வயிறு பெருக்கக் கண்ட இடத்தில் கண்ட உணவைப் புசித்துக் கொழுக்கிறான். நாய்க்குக் கோபம் வருவதுபோல் மனிதனுக்கும் கோபம் வருகிறது. காக்கைகள் இரைக்காக ஓடுவது போல் மனிதனும் ஓடியலைகிறான். புலியைப்போல் மனிதனும் பிறரை வருத்துகிறான். நரியைப்போல் நர மனிதரிலும் தந்திரசாலிகள் பலரிருக்கின்றனர். ஏறக்குறைய மிருகங்களுக்குள்ள குணங்களெல்லாம் மனிதனுக்கும் இருக்கின்றன. ஆனால் மனிதன் ஏனைய பிராணிகளை விட மேம்பாடுடையவன் என்பது எதனால் என்பீர்கள்?-பாபமின்னது, புண்யமின்னது, இதுசாஸ்திர சம்மதமான செய்கை, இது சாஸ்திர சம்மதமில்லாதது, என்றுணரும் ஓர் உணர்வு அதாவது பகுத்தறிவு இவனிடம் விளங்குகிறபடியால் மனிதன் மேலானவனாகிறான்.

இதனால் பாபவழிகளை விட்டு விலகிப் புண்ய வழிகளில் மனத்தைச் செலுத்தி உலகப் பழிப்பிற்காளாகாமலிருப்பவரே மனிதரிற் சேர்த்தெண்ணப் படுவர் என்பதும் மற்றவர் மிருக ஜாதியிற் சேர்த்தெண்ணப்படுவர் என்பதும் விளங்குகிறபடியால், மனிதப் பிறவியெடுத்தவர்கள் மனிதராகவே விளங்க முயற்சி செய்தல் அவசியமாகு மென்றுணர்வோமாக.

ஆடம்பரம் பயன் தராது.

ஒரு குரங்கு பல மிருகங்களுக்கு மத்தியில் ஒரு நாள் கோமாளியைப் போல் கூத்தாடியது. அதைக் கண்ட மற்ற மிருகங்களெல்லாம் வியப்படைந்து அது ஒரு பெரிய சாமர்த்தியமென்றெண்ணி அக்குரங்கைத் தங்களுக்கு அரசனாக்கிக் கொண்டன. நரி தந்திரமுள்ள பிராணியாகையினால் அதற்கு இச்செய்கை பிடிக்கவில்லை. அதனால் அது அக்குரங்கை எப்படியாவது அவமானப்படுத்தி அதனைத் தங்களுக்கெல்லாம் அரசனாயிருக்குந் தகுதியுடைய தல்லவென்று செய்ய வேண்டுமென்று தீர்மானங்கொண்டு சமயம் பார்த்திருந்தது.

பின்பொரு நாள் அந்த நரி, ஒரு கூட்டில் கொஞ்சம் பலகாரத்தைப் போட்டு வைத்துவிட்டுக் குரங்கரசனை அக்கூட்டண்டை அழைத்துப்போய் 'இதோ இங்கே திவ்யமான பலகாரம் வைத்திருக்கிறேன். எடுத்து உண்ணலாம்" என்றது. குரங்கு அந்தப் பலகாரத்தைப் புசிக்க விருப்பங்கொண்டு கூட்டில் நுழைந்து பலகாரத்தைக் கையிலெடுத்தது. உடனே அக்கூட்டின் கதவு மூடிக்கொண்டது. பிறகு அது நரியை நிந்திக்கலாயிற்று. நரி" ஏ குரங்கே, இந்த ஒரு தந்திரத்தை அறிந்துகொள்ளத்தக்க அறிவில்லாத நீயா மிருகங்களுக்கெல்லாம் அரசனாயிருப்

பதற் குரியவன்! வெகு நன்று, வெகு நன்று!" என்று பரிகாசஞ் செய்தது.

மனிதர்களிலும் இப்படி குரங்கைப்போல் தங்கள் ஆட்டப் பாட்டங்களினால் ஜனங்களை மயக்குகிறவருண்டு. ஆகையினால் அப்படிப்பட்டவர்களுக்குப் பெருமை கொடுப்பது மதியீனமாகும். உண்மையில் யோக்யதையுடையவனுக்கே மரியாதை கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் நன்மையுண்டாகும்.

ஒரு குடம் பாலில் ஒரு துளி ஜலம் விழுந்தால் அத்துளி பாலின் தன்மையை யடைகிறது. ஒரு குடம் நீரில் ஒரு துளி பால் விழுந்தால் அந்த நீர் பாலின் தன்மை யடைகிறது. இது வஸ்துக்களுக்குள்ள சுபாவமாகையினால், நாமும் சேரிட மறிந்து சேர்வோமேயானால் நல்ல நிலைமையை அடையலாம். ஆகையினால் தான் மனிதனாகப் பிறந்தவன் சாதுக்களுடைய சங்கத்தை நாடவேண்டுமென்று பெரியார் வற்புறுத்துகின்றனர்.

ஓர் எலி ஒரு வருஷத்தில் எண்ணூறு குஞ்சுகள் போடுகின்றனவாம்.

சோம்ப ரென்பர் தேம்பித் திரிவர்

ஓர் ஊரில் நால்வர் சகோதரரிருந்தனர். நால்வரும் இணைபிரியா நேசம் பாராட்டி வந்தனர். இப்படியிருக்கையில் அவர்களுடைய தந்தை காலமாயினார். அவர் கொஞ்சம் சொத்து வைத்திருந்தார். அதைப் பிரித்துக் கொள்ளத் தொடங்குகையில் நால்வருக்கும் சச்சரவுண்டாயது. நால்வரும் 'சற்று நிதானித்துப் பார்த்து, 'இந்தச்சொத்தினால் நம் நால்வருக்குமிருந்த அந்யோந்யத்துக்குப் பங்கம் நேரிடுகிறது. இதைப் பொது தருமத்துக்கு எழுதிவிட்டு நாம் நால்வரும் உழைத்துப் பொருள் தேடிக் காலக்ஷேபம் செய்வோம்" என்று தீர்மானங்கொண்டு வந்தனர். இந்தத் தீர்மானத்துக்கு ஒருவன் சம்மதப்படவில்லை. பிறகு, மூவரும் அவனிடமே அந்தச் சொத்தைக் கொடுத்து விட்டுத் தாங்கள் உழைத்துப் பொருள் தேடிக் கொள்வதாகக் கூறி வீட்டைவிட்டு வெளிப்பட்டனர்.

அப்பால் சிலவருஷ காலங்கழித்து அம்மூவரும் திரும்பித் தங்களூருக்கு வந்தனர். சொத்தை அடைந்த சகோதரன் சோற்றுக்கின்றிக் கஷ்டப்படக் கண்டனர், காரணம் வினவியபோது, பூமியிலிருந்து விளைந்து வருவதைக்கொண்டு நன்றாய் நாடோறும் மூன்று வேளை, வேளை தவறாமல் சாப்பிடுவதும் சாப்பாட்டு நேரம் போக மற்ற நேரங்களில் தூங்குவதும்

சீட்டாடுவதுமாக இருந்தனாலென்றறிந்ததும் மிகவும் விசனப்பட்டு, சொத்துடையவன் தக்க உழைப்பெடுத்துக் கொண்டாலன்றிச் சொத்து நிலைக்காதென்பதை உணரும் உணர்ச்சியில்லாதவனானால் முடிவில் சோம்பேறியாய்ச் சோற்றுக்குத் திண்டாடுவான் என்று கண்டுகொண்டு, அந்தச் சோம்பேறிச் சகோதரனை அழைத்து அவனுக்கு நல்லறிவுண்டாகும்படியாய் ஒரு தொழிலில் அவனை அமர்த்தித் தங்களாலியன்ற உதவியும் புரிந்து வந்தனர்.

Wise Sayings.

1. More than we choose, is more than we need, and only burden to the bearer.

2. We most of us give ourselves an immense amount of useless trouble, encumber ourselves, as it were, on the journey of life with a dead weight of unnecessary baggage; and as a man maketh his train longer, he makes his wings shorter.

கூச்சல்கள்

புத்திசாலியான மனைவியை அடையாதவன் அதாவது புருஷனுடைய வருவாயறிந்து அதற்குத் தக்கபடி குடும்பச் செலவை நடத்தத் தெரியாத மனைவி வாய்க்கப் பெற்றவனுடைய குடும்பம் முன்னுக்கு வருவது கஷ்டமென்று, அறிவிலியாகிய மனைவியைப் படைத்துக் குடும்பத் தொல்லைக்குள்ளாய் வருந்துகிறவன் கூவுகிறான்.

தங்கள் குலப்பெருமை யறிந்து நடக்கத் தெரியாத மக்களைப் பெற்றவன் மானங்கெட்டு ஈன நிலைக்குள்ளாய்,—

அச்சமுள் ளடங்கி அறிவகத்தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலனக்குடி
எச்சமற் றேமாந்திருக்கை நன்றே"—

என்று பெரியார் கூறியுள்ள நீதி வாக்கியத்தைப் பாடிக்கொண்டு,பன்றி பல குட்டிகள் போடுவது போல், பல பிள்ளைகளைப் பெறுவதிற் பயனில்லை. புத்தியுள்ள ஒரு பிள்ளையை பெற்றாற்போதும் என்று கூவுகிறான்.

மகனையும் மருமகளையும் மோசஞ் செய்து மகளுக்கும் மகளுடைய கணவனாகிய மாப்பிள்ளைக்கும், மகளுடைய மக்களாகிய பேரப் பிள்ளைகளுக்கும் கண்டுங் காணாமல் பண்டங்களைத் தன் வீட்டிலிருந்து

வாரிவிட்ட கிழவி, இப்போது அப்படிச்செய்தது தவறென்று கூச்சலிடுகிறாள். ஏன்? மகளுடைய மக்களாகிய பேரப்பிள்ளை, மாப்பிள்ளை, மகள், யாவரும் குளம் வறண்ட காலத்து அதனை நாடாத பறவைகளைப் போலாயினர். மகன், மருமகள், மகனுடைய மக்களாகிய பேரப்பிள்ளைகள் யாவரும் ஜலம் வறண்ட போதும் குளத்தை விட்டகலாத கொட்டியும் ஆம்பலையும் போல் ஒட்டி உறவு கொண்டாடலாயினர்.

Kindness is a conquering weapon.

I had my money and my friend
I lent my money to my friend
I asked my money of my friend
I lost my money and my friend.

நான் கண்ட புதுமை

ஒருநாள் ஒரு எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயருடன் சம்பாஷிக்க நேர்ந்தது. அப்பொழுது, நாங்களிருந்த வீட்டுவாசலில் ஒரு சிறுபெண் சென்றது. அப்பெண்ணைக் கண்ட உபாத்தியாயர் 'இந்தப்பெண் என்னிடம் வாசித்தவள். நல்ல சாமர்த்தியசாலி. படிப்பிலும் கெட்டிக்காரி. ஒரு நாள் நான் பள்ளிக்கூடம் போகவில்லை. அன்று ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஸ்கூலுக்கு வந்து விட்டார். அவர் இப்பெண்ணையும் இப்பெண்ணுடனிருந்த சிலரையும் பார்த்து, 'நீங்களெல்லோரும் இன்று காலையில் பள்ளிக்கூடம் வந்திருந்தீர்களா?'—என்று கேட்டாராம். இப்பெண் முன்வந்து, 'நாங்களெல்லாரும் காலையில் சற்று நேரம் வந்திருந்து விட்டுப் போய்விட்டோம். உபாத்தியாயர் வீட்டில் இன்று விசேஷம். அதனால் அவர் வரவில்லை. காலையில் அவர் கொஞ்சநேரம் வந்திருந்தார்." என்று பதிற் சொல்லி யனுப்பியதாம். இன்ஸ்பெக்டர் பள்ளிக்கூடத்தைப் பற்றி நல்ல ரிபோர்ட் எழுதிவிட்டுப் போய்விட்டார். இவ்வாறு என்னைத் தப்புவித்தாள். இந்தப் பெண்" என்று கூறிச் சந்தோஷமடைந்து, "அப்படிப்பட்ட சாமர்த்தியமுடையவள் இவள்" என்றான்.

நான் விடை கூறுவதன் முன் இச்சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பெண், எங்கள் முன்

வந்து, "என் கெட்டிக்காரத் தனத்தையும் புத்தி சாலித்தனத்தையும் நீங்கள் தான் மெச்சிக்கொள்ள வேண்டும் நான் என்னசெய்து விட்டேன். பொய் சொன்னேன். பொய் சொன்ன என்னைப் புகழ்வது நியாயமாகுமா?" என்று சாதுர்யமாய் விடை யளித்தாள்.

உபாத்தியாயர், "நீ சொன்ன பொய் உன் குருவைத் தீங்கினின்றும் தப்புவித்ததாகையினால், அது பொய்யாகாது. மெய்யாயிருந்தாலும் பிறருக்குத் தீங்கு விளைவிப்பதானால் அதுதான் பொய்யாகும்" என்று கூறினார். அப்பெண் கேட்டு மனமகிழ்ச்சியுடன் சென்றாள்.

ஒருநாள் காலையில் ஒரு ஆலமரத்தினடியில் பலர்கூடிப் பலவிதமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் "இப்பொழுது தமிழ் நாட்டில் யாரோ ஒரு மேதாவி ஒரு பத்திரிகையின் மூலமாய்த் தெய்வமில்லை யென்று முழக்குகிறான். அதனை ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆதரிக்கிறார்கள். இந்த நாட்டினுடைய தற்கால நிலைமையை என்னென்று கூறுவது?"—என்றான்.

இதைக்கேட்ட ஒருவன், "தமிழ்நாடு அப்படி இன்னும் கெட்டுப் போகவில்லை. தெய்வமில்லை யென்று கூறும் அந்த மேதாவியின் பேச்சுக்குச் செவி கொடுப்பவர்கள் ஆயிரக்கணக்கா யிருப்பினும் அவர்கள் யாவர்?—எல்லோரும் அறிவில்லாத பேதைகளென்பதை நீங்கள் நம்புங்கள். அறிஞன் ஒருவனுக்கு

ஆயிரம் அறிவிலிகள் சமானமாகார்கள் என்பது அநுபவமாகையினால், அறிவிலிகள் சேர்ந்த அந்த இயக்கம் ஈடேறாது" என்றான். எல்லோரும் "நன்றாய்ச் சொன்னாய்! நன்றாய் சொன்னாய்!" என்றனர். நானும் உங்களுக்கு அதனை நன்றாய்ச் சொன்னேன்.

நான் ஒரு ஊமைப் பையனைக் கண்டேன். அந்தப் பையனைப் பற்றி விசாரித்தேன். அவனுடைய தந்தையும் ஊமை யென்று தெரியவந்தது. அது கண்டு வியப்புற்றேன். பின் ஒரு திக்குவாயனைக் கண்டேன். அவனைப்பற்றி விசாரிக்கையில் அவன் தந்தையும் திக்குவாயனென்று தெரியவந்தது. அது கண்டு வியப்புற்று, ஒரு பக்கம் திரும்பினேன். அங்கே ஒரு பையனிருந்தான். அவன் வாய் முழுவதும் பல்லாயிருந்தது. அவனைப்பற்றி விசாரிக்கையில் அவனுடைய தந்தைக்கும் தாய்க்கும் வாய் நிறையப் பற்களிருக்குமென்று தெரியவந்தது. இதனால் பெற்றோரின் நல்ல குணமோ கெட்ட குணமோ மக்களுக்கும் ஏற்படுவது இயல்பென்பது கண்டேன். அதை உங்களுக்கும் சொன்னேன்.

ஒருதெருவில் நாலைந்து பேர் சேர்ந்தாற்போல் வந்தனர். அவர்களைக் கண்ட இரண்டு நண்பர்களில், ஒருவன் "இவர்களை நீ இன்னார் இன்ன தொழிலுடையவரென்று சொல்வது கூடுமா"—என்று இன்னொருவனைக் கேட்டான். அவன் "நான் சொல்வேன்" என்று கூறி, சற்று அவர்களைக் கவனித்துப் பார்த்து பின்வருமாறு கூறினான்:—

அதோ அவர்களில் தோளில் வேஷ்டியை மூன்றாய் மடித்துப் போட்டுக்கொண்டு இடுப்பில் அழுக்கு வேஷ்டி உடுத்திருப்பவன் கோயில் சயம்பாகி அல்லது பரிசாரகன் என்பது நிச்சயம். இன்னொருவன் தொடையில் தாளம் போட்டுக்கொண்டு வருகிறானல்லவா ?-அவன் சங்கீத வித்வானா யிருக்க வேண்டும். இல்லாவிட்டால் மிருதங்க மடிப்பவனாக விருக்கவேண்டும். அதோ விசாலமான மார்புடையவனாய் முண்டாப் பெருத்த கரங்களுடனிருப்பவன் விவசாயியா யிருக்கவேண்டும். அதோ எல்லாருக்கும் கடைசியில் வயிறு தள்ளிப்போய்ச் சூம்பிய கைகால்களுடனும் பஞ்சடைந்த கண்களுடனும் வருபவன் தாலூகா குமாஸ்தாவாக வேணும் அல்லது எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயராகவேணு மிருக்கவேண்டும்'' என்று கூறினான். அவனுடைய நண்பன், "நீ, சொல்லியது சரி. அவரவர் செய்கையை அவரவர் உருவமும் அவயவமும் காட்டி விடுகின்றன. ஆலோசிப்போமானல் உத்தியோகஸ்தனுடைய வாழ்க்கையே கேவலமானதென்று தெரிகின்றது. அவனுக்கு அவன் உடல் நலமடைவதற்குரிய சாதகம் எந்த வழியிலும் இல்லை யல்லவா?''—என்று வியப்புற்றான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த நான், ' உத்தியோகம் வேண்டுமென்று சண்டை போடுகிறார்களே சிலர். அவர்கள் மதியை எதிற்சேர்த்தெண்ணுவது?'' என்றேன். அவன் "பேசும் இயல்புடைய மிருகமில்லை. இவர்களைப்பேசும் மிருகமாக வைத்துக்கொள்ளலாம்''—என்றான்.

(பால விநோதினி)

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருட சந்தா தபாற் கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 1 8 0
	பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ...	ரூ. 2 0 0
தனிச்சஞ்சிகை	விலை	ரூ. 0 2 0

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானால் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	...ரூபா 10—0—0
அரைப் பக்கத்திற்கு	... ரூபா 5—0—0

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.

Vavilla Press ,Madras.